விலை ரூபா 5.00 Registered as a News Paper in Sri Lanka பக்கம் எட்டு

# வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆவணி 6 வியாழக்கிழமை (22-8-2002) தொலைபேசி 3378 ஒலி 246

மங்கையர் மனம் கொள்ளை கொள்ளும் தங்க நகைகளுக்கு
சாரங்கா நகைமாடம்
177/4கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P;- 2480

## திருமலையில் களேபரம் தமிழ்-முஸ்லிம்கள் மீது இளைஞர் குழு தாக்குதல்

(திருகோணமலை)

திருகோணமலையில் இடம்பெற்ற இசைநிகழ்ச்சி ஒன்றின்போது இளைஞர் கோஷ்டி ஒன்றினால் நூற்றுக்கு மேற்பட்ட தமிழ் முஸ்லிம் மக்கள் தாக்கப்பட்டுள்ளனர். 7கடைகள் உட்பட 13 வாகனங்கள் அடித்து நொருக்கப்பட்டுள்ளன.

நேற்று அதிகாலை 3 மணியளவில் திருகோணமலை முற்ற வெளியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதன்போது 30 ற்கும் அதிகமான பொது மக்கள் காயமடைந்தனர். இவர்களில் 20 பேர் திருகோணாமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இம் மோதல் சம்பவம் தொடர்பாக 18 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த)

## அமெ. பிரதி இராஜாங்க அமைச்சர் இன்று யாழ்ப்பாணம் வருவார்

(கொழும்பு)

அமெரிக்க பிரதிஇராஜாங்க அமைச்சர் ஆமிடேஜ் இன்று யாழ்ப்பாணம்வருகை தரவுள்ளார். இன்று காலை 9.45 மணியளவில் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடையும் அவரை வெளியுறவு அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ வரவேற்பார்.

கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து உடனடியாக விசேட விமானம் மூலம் பலாலி விமானப்படைத் தளத்தை ஆமிடேஜ் வந்தடைவார். இவருடன் பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட மற்றும் முப்படைத் தளபதிகள் ஆகியோர் வருகைதரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் வரும் அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் பலாலி படைத்தள அதிகாரிகள் மற்றும் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாய

(8 ம் பக்கம் பார்க்க)

# அமைச்சர் ஜோன் அமரதுங்காவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் 35 வாக்குகளால் தோற்கடிப்பு

## தமிழ் எம். பிக்கள் அரசுக்கு ஆதரவு

(கொழும்பு)

**உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்காவுக்கு எதிராக பாராளுமன்றில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை 35 அதிகப்படியான வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.**

எதிர்க்கட்சியான பொது ஜனஐக்கிய முன்னணியினால் அமைச்சர் ஜோன் அமரதுங்காவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத்தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

உள்நாட்டில் பாதுகாப்பு சீர்குலைத்துள்ளது என்றும் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கும்அமைச்சரே பொறுட்புஎன்றும் குறிப்பிட்டே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

இது தொடர்பான விவாதம் பாராளுமன்றில் இடம்பெற்று நேற்று வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக பொது ஜனஐக்கியமுன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களும், ஜே. வி. பி பாராளுமன்ற உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

## புலிஉறுப்பினர்மீதுதாக்குதல் வரதன் குழுவைச் சேர்ந்த மூவருக்கு விளக்க மறியல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஆரயம்பதியில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக ரெலோ அமைப்பிலிருந்து பிரிந்து சென்ற வரதன் குழுவைச் சேர்ந்த 3 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவ[...]றில் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர். அவர்களை எதிர் வரும் 3 ம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் அப்துல் கபூர் உத்தரவிட்டுள்ளார்.

ஆர். எல்: பிரியதர்சன், தம்பிராஜா, சிங்கராஜா, சு. திலகேஸ்வரன்ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

கடந்த 14 ம் திகதி விடுத

உள்நாட்டில் பாதுகாப்பு சீர்குலைத்துள்ளது என்றும் இது தொடர்பான விவாதம் பாராளுமன்றில் இடம்

களும், ஜே. வி. பி பாராளுமன்ற உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

(8 ம் பக்கம் பார்க்க)

டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரும் மட்டக்களப்பு நீதிமன்

செய்யப்பட்டவர்களா வா.

கடந்த 14 ம் திகதி விடுத

(8ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் ஹக்கீம் பிரதமரைச் சந்தித்தார்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கிம் நேற்று பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்

வடக்கு கிழக்குக்கான இடைக்கால நிர்வாக் சபையில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் மற்றும் தாய்லாந்து சமாதானபேச்சு வார்த்தையில் இடம்பெற வேண்டிய முஸ்லிம் சமூகத்தவர்களின் உரிமைகள அதிகாரங்கள் குறித்தே இருவரும் பேச்சு நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(8ம் பக்கம் பார்க்க)

### நாரந்தனைத் தாக்குதலைக் கண்டித்து

## தீவகத்தில் இரு இடங்களில் நாளை மறியல் போர்

(ஊர்காவற்றுறை)

நாரந்தனையில் கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற கடற்படையினரின் அடாவடித்தனத்தினைக் கண்டித்து நாளை வெள்ளிக்கிழமை இரு இடங்களில் மறியல் போராட்டங்கள் இடம்பெறவுள்ளன.

தீவக வெகுஜன அமைப்புக்ள் ஒன்றியமும் தீவக மக்கள் நலன் காப்பகம், ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஆகியன இணைந்து மேற்படி மறியல் போராட்டங்களை ஏற்பாடு செய்துள்ளன.

மேற்படி மறியல் போராட்டங்கள் வேலணை வங்களாவடிச் சந்தியிலும் ஊர்காவற்

(8ம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி வழங்கிய உறுதியை நம்புவதற்கு அரசு தயாரில்லை

## அமைச்சர் மஹிந்தசமரசிங்க

(கொழும்பு)

அரசியல்யாப்புச் சீர்திருத்தத்தை பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியாது போகும் பட்சத்தில் நிச்சயம் பொதுத்தேர்தல் நடைபெறும்என ஐக்கியதேசியகட்சிபின்பிரதான அமைப்பாளரும் அமைச்சருமான மஹந்தசமரசிங்க தெரிவித்துள்ளார்

பாராளுமன்றம் தனது பெரும்பான்மையை இழந்தாலும் மாற்று அரசாங்கம் ஒன்றை அமைக்கமுடியாது போகும் பட்சத்திலேயே பாராளுமன்றத்தைக் கலைப்பேன்என ஜனாதிபதி சபாநாயகருக்கு உறுதிமொழி வழங்கியுள்ளார் ஆனால் ஜனாதிபதியின் உறுதிமொழியை அரசாங்கம்நம்புவதற்குத் தயாராக இல் லை

பொதுஜன ஐக்கியமுன்னணி அரசாங்கம் கடந்த வருடத்தில் பெரும்பான்மையை இழந்தபோது அப்போதய எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை பெற்றிருந்தது எனினும் ஜனாதிபதி அப்போதைய பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலுக்கு உத்தரவிட்டார்

மேலும்கடந்தஜனாதிபதித் தேர்தலின் போது ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படும் என ஜே.வி.பிக்கு ஜனாதிபதி

(8 ஆம் பக்கம் பார்க்க)

அன்புவாசகர்களே,
நாளை வெள்ளிக்கிழமை
**சங்குநாதம்**
வெளிவரும் என்பதை
அறியத் தருகின்றோம்
(ஆ-ர்)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மொறிஸ் ஒக்ஸ்போட் டீசல் கார் விற்பனைக்குண்டு நேரில் வரவும் தொடர்பு த குமாரசாமி 352, நாவலர்வீதி, யாழ்ப்பாணம். (5837(

### கட்டடப் படவரைஞர் தேவை

கட்டடப் படங்கள் கீறக் கூடியவர்கள் அல்லது தொழில் நுட்பக் கல்லூரியில் பயிற்சி முடித்தவர்கள் விண்ணப்பிக்கவும். விண்ணப்பிக்கவேண்டிய முகவரி: விளம்பர இல. 305பே|பா. வலம்புரி யாழ்ப்பாணம். (5845)

## பரீட்சை நடைபெறாது

(சுதுமலை)

சுகாதார சேவைகள் நலன்புரி பே சாக்கு அமைச்சினால் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தரம் 'ஆ' இல் உள்ளவர்களிற்கு எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த வினைத்திறமைகாண்தடைப்பரீட்சை அன்றையதினம் நடைபெற மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-252)

## இன்னிசை விரிவுரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தன் ஆலயஉற்சவகாலத்தில் நல்லூர் சைவ மகாசபை, ஸ்ரீமுத்துவிநாயகர் ஆலயமண்டபத்தில் நடத்தும் இன்னிசை விரிவுரை இன்று 'பாரத வம்சம்' என்னும் பொருளில் இடம்பெறவுள்ளது.

இன்னிசை விரிவுரையை பிரம்மஸ்ரீ நித்தியானந்த சர்மா நிகழ்த்தவுள்ளார். (உ)

## தேசிய ஐக்கிய முன்னணி

# முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக் கருதி முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து செயற்படும்

(கொழும்பு)

முஸ்லிம் மக்களின் பாதுகாப்பையும், அரசியல் தலைமைத்துவத்தினையும் கருத்தில் கொண்டு தேசிய ஐக்கிய முன்னணியும், முஸ்லிம காங்கிரஸ் கட்சியும் ஒன்றிணையவுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையே தாய்லாந்தில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சு வார்த்தைகளின் போது தேசிய ஐக்கிய முன்னணி, முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து செயற்படவுள்ளதாக அதன் உப தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எல் ஏ.எம் கிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

எனினும், இவ் விடயம் குறித்து தமது கட்சியின் தலைவி பேரியல் அஷ்ரப் எந்த விதமான தீர்மானங்களையும் எடுக்கவில்லை.

தமது கட்சி இது குறித்து சில கோரிக்கைகளை முஸ்லிம் காங்கிரஸிடம் முன் வைத்துள்ளதாகவும், இவை ஏற்றுக் கொள்ளப்படும் பட்சத்திலேயே இணைந்து செயற்படுவது குறித்து இறுதி முடிவெடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், தாய்லாந்தில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைகளின் போது, முஸ்லிம் மக்களின் பிரதிநிதியாக கலந்து கொள்ளவுள்ள அமைச்சர் ரவூப் ஹக்கீம், அதற்கு முன்தாக தமது கட்சியுடன் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்த மேண்டும் எனவும்,

முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு குறித்து தான் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் தே.ஐ.மு. தலைவி பேரியல் அஷ்ரப் தெரிவித்துள்ளார். (உ-8)

## சம்பளப் பணம் கொள்ளை

(புத்தளம்)

புத்தளம் மாவட்டத்தில் தங்கொட்டுவப்பகுதி சிங்கள பாடசாலை ஒன்றில் ஆசிரியர்களுக்கு, வங்கியிலிருந்து எடுத்துச் சென்ற சம்பளப்பணத்தை மோட்டார் சைக்கிளில் சென்ற முகமூடி அணிந்த இருவர் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் நண்பகல் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆசிரியர்களுக்கான ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பணமே கொள்ளையிடப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர், தங்கொட்டுவ பொலிஸில் புகார் செய்துள்ளனர். (த)

## மணவாளக் கோல விழா

(யாழ்ப்பாணம்)

மூளாய் கிழக்கு கம்பிராயப்புலம் ஆதி வைரவ சுவாமி கோவில் மணவாளக் கோல விழா நாளைஇடம் பெறவுள்ளது. (உ)

## அறிமுக அரங்கு

(மந்திகை)

கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கலாசார மன்றத்தின் ஏற்பாட்டில் ஈழத்து எழுத்தாளர்கள் மூவரின் நூல்களை அறிமுக அரங்கு எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது

தேவி பரமலிங்கத்தின் 'அணி திரளும் சிறு அலைகள்' அ.யேசுராசாவின் 'பனி மழை' சோ.பத்மநாதனின் 'ஆபிரிக்கக் கவிதைகள்' ஆகிய நூல்களே அறிமுகம் செய்யப்படவுள்ளன.

சங்கத்தின் தலைவர் த. சிதம்பரப்பிள்ளை தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரபல எழுத்தாளர் தெணியான், குப்பிளான் ஐ சண்முகம் எஸ்.கந்தையா ஆகியோர் அறிமுகவுரைகளை நிகழ்த்தவுள்ளனர். (உ-23)

## சமாதானப்பேச்சுக்குமுன்னர் பிரதமரைச் சந்தித்துப்பேச முஸ்லிம்கள் கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தாய்லாந்தில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு முன்னர் முஸ்லிம் பாராளுமன்ற பிரதிநிதிகள் அமைப்புடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேச்சு வார்த்தையொன்றை நடத்தவேண்டும்.

முஸ்லிம் பாராளுமன்ற பிரதிநிதிகள் அமைப்பின் உப தலைவரும் பொது ஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினருமான எச்.எம் பௌஸியே கோரிக்கை விடுத்துள்ளார்

இவ்வமைப்பின் தலைவரும் அமைச்சருமான எம்.எச் முகமட் மூலமாக இவ்விடயம் குறித்து ஆராய பிரதமரிடம் சந்தர்ப்பம் ஒன்று கேட்கப்பட்டுள்ளதாகவும அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முஸ்லிம் மக்கள் நாட்டின் பல பாகங்களிலும் வாழ்ந்து வருகிறார்கள் எனவே அவர்களது சுதந்திரம் மற்றும் பாதுகாப்பு என்பன நியாயமான முறையில் உறுதி செய்யப்பட வேண்டும்.

இதேவேளை இவ்விடயம் தொடர்பாக பிரதமரை அண்மையில் சந்தித்தபோது அங்கு முஸ்லிம் மக்கள் குறித்த பல விடயங்கள் வலியுறுத்தப் பட்டதாகவும தாய்லாந்து பேச்சு வார்த்தைகளுக்கு முன்னர் சகல முஸ்லிம கட்சிகளுடன் பேசவுள்ளதாக பிரதமர் உறுதியளித்துள்ளார் எனவும அவர் தெரிவித்துள்ளார். (உ-8)

## இராசி பலன்

22 8 2002

(ஆவணி 6வியாழன்)

பூரணை பி.இ 4 13

அவிட்டம் முழுவதும்

நல்லநேரம்-7.35-9 05

இராகுகாலம்-1.35-3.05

**மேடம்**

பொருள்வரவு, மனமகிழ்ச்சி, நண்பர்கள்சந்திப்பு தொழில்சிந்தை

**இடபம்**

கடினஉழைப்பு, உற்சாகம், தொழில்வெற்றி, சுபநிகழ்வு

**மிதுனம்**

திட்டமிடல், வீண்பயம் உடல்உழைப்பு, வயிறுசம்பந்தமானநோய்

**கடகம்**

நல்ல உணவுகிடைத்தல் வீண்தொல்லை, எதிர்ப்பு உடல்அசதி

**சிங்கம்**

திடீர்பயணம், பணவரவு கௌரவம்உண்டாதல், அபூர்வசந்திப்பு

**கன்னி**

பகைவர்விலகுவர், நோய் குணமடைதல், பணவரவு திடீர்பயணம்

**துலாம்**

தாழ்வுநிலை வியாபார மேன்மை, மனக்கஷ்டம்

**விருச்சிகம்**

கல்விமேன்மை, ரோகபயம், மனப்பயம், அவநம்பிக்கை

**தனுசு**

புதியபொருள் சேர்க்கை, அன்னியர்சந்திப்பு, கூட்டுமுயற்சி, வாக்குமேன்மை

**மகரம்**

மாதர்நட்பு, காரியத்தடை, பணவிரயம், கௌரவக்குறைச்சல்

**கும்பம்**

ஆழ்ந்தசிந்தை, பெரியோர் ஆசி, நண்பர் உதவி, நல்ல முயற்சி

**மீனம்**

பிதாசிந்தை, பணவிரயம் மனக்குழப்பம், கர்வம்உண்டாதல்

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வள்ளுவன்

## பரு.நகர மத்தியில் பாரவூர்திகள் தரிப்பதால் விபத்து அபாயம்

(மந்திகை)

பருத்தித்துறை இறங்குதுறையில் பொருட்களை ஏற்றுவதற்காக நகரின்மையப் பகுதியில் நிறுத்தப்படும் பாரஊர்திகளை வேறுஇடத்திற்கு மாற்றுமாறு அப்பகுதி வர்த்தகர்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

சன நெருக்கடி மிகுந்துள்ள இவ்வேளையில் இவ்வாறுபார ஊர்திகளை நிறுத்துவது விபத்துக்கள் ஏற்பட ஏதுவாக அமைவதாகவும்.

தரித்து நிற்கும் பாரஊர்திகளின் நடத்துனர்கள் சாரதிகள் பொறுப்பற்ற வகையில் சில வேளைகளில் நடந்து கொள்வதாகவும் வர்த்தகர்கள் பருத்தித்துறை நகரசபையில் முறையிட்டுள்ளனர். (உ-23)

## தப்பியோடிய மற்றோர் கைதியும் கைதானார்

(புத்தளம்)

புத்தளம் சிறைச்சாலையிலிருந்து தப்பியோடிய கைதிகளில் மற்றுமொருவரை சிலாபம் பொலிசார் முன்னேஸ்வரத்தில் வைத்து நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர்.

கடந்த 7ந்திகதி சிறைக்காவலர்களை தாக்கிவிட்டு 7கைதிகள் தப்பிச்சென்ற சம்பவத்தையடுத்து பொலிஸார் கைதிகளை தேடிவலைவிரித்திருந்தனர்.

தற்போது இரு கைதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். (த)

## நாட்டில் புதிய அரசியல் கலாசாரம்மலர அனுராகூறும் யோசனை

(கொழும்பு)

நாட்டில் புதிய அரசியல் கலாசாரம் உருவாக்கப்பட வேண்டுமானால் கட்சிகள் அனைத்தும் ஒருவரைஒருவர் குறைகூறுவதை நிறுத்திக் கொள்ளவேண்டுமெனபொது ஜனஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் அனுராபண்டார நாயக்க தெரிவித்துள்ளார்.

உள்விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்காவிற்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் மீதான விவாதத்தின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவ்விவாதம் ஆரம்பமானது முதல் இருபிரதான கட்சிகளும் பரஸ்பரம் குற்றச்சாட்டுக்களில் ஈடுபட்டன..

எந்த அரசாங்கம் ஆட்சியமைத்தாலும் பொலிஸ் அவற்றின் கையாளாகவே செயற்பட்டு வருகின்றது எனவும் அவர் அங்கு தெரிவித்துள்ளார். (உ-8)

## தேர்தல் அலுவலர் விபரங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இடம்பெறவுள்ள உள்ளூராட்சித்தேர்தல் கடமைகளுக்கான அலுவலர்கள் தொடர்பான விபரங்கள் கோரப்பட்ட கடிதங்கள் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும், பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மேற்படி கடிதங்களை பாடசாலை அதிபர்கள் தத்தமது வலயக் கல்வி அலுவலங்களிலும், ஏனைய அலுவலர்கள் சம்பந்தப்பட்ட பகுதி பிரதேசசெயலகங்களிலும்பெற்று உடன்விபரங்களை அனுப்பிவைக்குமாறு யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ். நடராசா கேட்டுள்ளார். (உ)

## காணி உறுதியின் பிரதிகளை தேடும் படிவங்கள் தமிழிலில்லாதமொழிகளில்

(யாழ்ப்பாணம்)

செயலகத்தில் உள்ள காணிப் பதிவாளர் அலுவலகத்தால் வழங்கப்படும் காணி உறுதியின் பிரதிகளைத் தேடுவதற்கான படிவங்கள தனிச் சிங்களத்திலோ அல்லதுதனி ஆங்கிலத்திலோ இருப்பதாக தெரியவருகிறது.

மேற்படி படிவங்களை நிரப்ப முடியாத சாதாரண பொதுமக்கள் தமது முயற்சியை இடையில் கைவிடும்நிலை இதனால் ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமிழ் அரசகரும மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ள நிலையிலும் இவ்வாறான வேற்றுமொழிப் படிவங்களை சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் அனுப்பி வைப்பது குறித்து பொதுமக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். (உ-6)

## சர்வதேச சிறுவர் தினத்தில் பிரதேச செயலர் பிரிவுகளில் பல்வேறு நிகழ்ச்சிகள்

(சுதுமலை)

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம்திகதி அனுட்டிக்கப்படும் சர்வதேச சிறுவர் தினத்தை ஒட்டி வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள எல்லாப்பிரதேச செயலர் பிரிவுகளிலும் சிறுவர்களின் உரிமைகள தொடர்பான நிகழ்ச்சிகளைதிட்டமிடுமாறு வடக்கு-கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்களஆணையாளர் சகல பிரதேச செயலகங்கள், மற்றும் பிரதேச சபைகள், நகரசபைகள் என்பவற்றுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

இவ்வருடசர்வதேச சிறுவர் தினத்தின் குறிக்கோளான ''சகல பிள்ளைகளுக்கும் கல்வி'' என்பதை பிரதிபலிக்கும் வகையில் சிறுவர்களது உரிமைகள், அவர்களைப்பாதுகாத்தல் ஆகிய விடங்கள் தொடர்பாக தங்கள் பிரதேச மட்டத்தில் செயல்திட்டங்களை வகுத்து சமூகத்தில் சிறுவர்கள்பற்றியவிழிப்புணர்வை ஏற்படுத்தும்வகையில்நிகழ்ச்சிகள் அமையவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-252)

## நல்லூரான் திருவடிக்கு-10

இன்று மஞ்சத்திருவிழா



### வள்ளலே எமைக் காப்பாய்

மூவுல களந்த மூர்த்தி முகுந்தனின்மருகன் கீர்த்தி
யாவுமுன் தாளில் சேரும்பாவமாம் வினைகள் தீரும்

நாவினால் உன்னைப்பாடும் பாக்கியம் தந்தாய் தேவா!
தேசொனில் மஞ்சம் தன்னில் வீதிவந்தெமையே காப்பாய்

நாதத்தின்இசையாய் நின்று நான்மறை தன்னைந் தந்து
தேன்மலர் மணமாய்நின்று தேனிலும் சுவையைத் தந்தாய்
வான்தரும் மழையை நல்கிவையகம் வாழவைத் தோய்!
மான்மகள் மகிழவந்த வள்ளலே எம்மைக் காப்பாய்

கவிஞர் கந்தமுருகேச தாசன்

### 'அருளாட்சி புரிந்திருவாய்'

தஞ்சமென வருவோரைக் காத்தருளும் வேலன்
தமிழ்ர்க்கோர் தெய்வமென வந்துதித்த முருகன்
நெஞ்சமதில் வைத்தவனை துதித்து நின்றால்
நீண்டதுயர் போக்கி இன்பமதைத் தருவான்
மஞ்சமதில் ஏறு மவன் அழகு காண
மடைதிறந்த வெள்ள மெனப் பக்தர்கூட
அஞ்சேலென அபயமளித்து நல்லைக் கந்தன்
அருளாட்சி புரிந்தென்றும் ஆட்கொள்வானே!

மு.முத்துக்குமார்

### நெஞ்சம் பாடும் வந்தனைகள்

மஞ்சத்தில் ஏறும் முருகா-நம்
நெஞ்சத்தில் ஒளியேற்றிடையா!
வையத்தில் டனிதத்தை வைத்திடையா
ராகங்கள் பல இயம்பி-நம்
சோகங்களை பாடுகிறோம்! நம்
சாபங்கள் நீங்கிட உந்தன்
சந்நிதி நாடுகின்றோம்!

எஸ். கவிதரன்
சண்டிலிப்பாய்!

### நெஞ்சமெனும் மஞ்சத்தில்

மஞ்சவிழா வன்று மாலையிலே பக்தரெல்லாம்
விஞ்சுபுகழ் நல்லூரின் வித்தகனை- நெஞ்சமெனும்
மஞ்சத்தி லேற்ற மயக்கமெலாம் போய்விடவே
எஞ்சுமவன் தஞ்சம் எமக்கு.

வேலணை சி.இராசரத்தினம்

### நல்லூர் மஞ்சம்

தீயின் ஒளியில் வீதி சுற்றும் மஞ்சம்
தீமையின் விழியில் வீபூதி கொட்டும் மஞ்சம்
நோயின் அழிவை நுழைந்து விரட்டும் மஞ்சம்
தாயின் அழகை நினைந்து காட்டும் மஞ்சம்

புலேந்திர ராசா

### அபயம் அளித்திடையா!

மஞ்சம் தனில் வந்தே
மானிடத்தைக் காத்திடையா
பஞ்சுபடும் பாடு படும்
பாவியரைப் பார்த் திடையா!
அஞ்சேல் என எமக்கு
அபயம்அளித்திடையா!
விஞ்சும் எழிற் குமரா!
வீசுபுகழ் தந்தி டையா!

தென்நல்லை கு.பகீரதன்

### முத்துக்குமரா நீவா! வா!

மஞ்சம் தனிலேறி முத்துக்குமரா நீவா வா—எம்
நெஞ்சம் தனில்வாழும் நல்லை வேலா நீவாவா!-நாம்
அஞ்சும் நிலையகற்ற ஆறுமுகனே நீவாவா!-
என்றும்
தஞ்சம் நீதானே! தமிழின் தலைவா நீவாவா!

நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்

# பண் பாட்டைப் பேணுவதிலேயே இனத்தின் மேன்மை தங்கியுள்ளது

## இளம்பரிதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஒரு இனத்தின் கலை, பண்பாட்டு பாரம்பரிய வாழ்க்கை முறை தான் அந்த இனத்தின் இருப்பையும் சிறப்பையும் எப்பொழுதும் எங்கேயும்வெளிப் படுத்தும்

எந்தவொரு இனமாயினும் அதன் மேன்மை, அந்த இனத்தின் பண்பாட்டுப் பாரம்பரியங்களிலும் அதனைப் பேணும் வகையிலுமே தங்கியுள்ளது.

கடந்த திங்களன்று இடம் பெற்றயாழ்.மாவட்டதிரைப்பட வழங்குநர் கூட்டுறவுச் சங்கத்தலைமை அலுவலகத் திறப்பு விழாவில் சிறப்புரையாற்றிய யாழ்.மாவட்டஅரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர்அங்கு மேலும் உரையாற்றுகையில்,

எங்களுடைய மக்கள் இந்தப் பண்பை மிகுதியாகவே கொண்டுள்ளனர்.

எங்கள் இனத்தினை அழித்தொழிக்கும் எதிரியின் நீண்டகாலத்திட்டம் கைகூட்டாமல் இருப்பதற்குஇதுவே பிரதான காரணம்.

எங்களுடைய இந்த இனப் பற்றையும் கலை பண்பாட்டு விழுமியங்களையும் சின்னாபின்னப்படுத்த பெரும் எடுப்பில் திட்டங்கள் கடந்தகாலங்களில்மேற்கொள்ளப்பட்டன.

இவற்றை முறியடிக்கும்விதமாக அறிஞர்களும்கலைஞர்களும் தமது உயிரைக்கூட மதிக்காமல் செயற்பட்டிருக்கிறார்கள்.

திரைப்பட வெளிப்பாடு என்பது சமூகத்திற்குஆக்கபூர்வமான சில வழிகளைக் காட்டினாலும் மறு புறத்தில் ஒரு சமூகத்தின் சிதைவுக்கு காரணமாக அமைந்து விடுகிறது என்று குறிப்பிட்டார்.

(உ-6)

## ஆசிரியர் சம்பளம் வழங்க இலங்கை வங்கி கிளையில் தனியான கரும பீடம்

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்கள் சம்பளம் பெறுவதில் உள்ள இடர்பாடுகள் தொடர்பாக வடமாகாண அதிபர்கள் சங்கம் யாழ்ப்பாணம் இலங்கை வங்கி பிரதம முகாமையாளர், கிளை முகாமையாளர், பிரதேச முகாமையாளர் ஆகியோருடன் கலந்துரையாடிய தன் பலனாக இலங்கை வங்கிக் கிளையில் தனியான கருமப் பீடத்தில் ஆசிரியர் சம்பளம் வழங்க வசதி செய்யப்பட்டுள்ளது.

கட்டுநிதி கிடைத்து இரு நாட்களுக்குள் இச் செயல் முறை வங்கியில்நடைமுறைப் படுத்தப்படும்.

(உ)

## மணல் வெளி அரங்கு

அறிமுக அரங்கு

(யாழ்ப்பாணம்)

இணுவையூர் சிதம்பரதிருச் செந்திநாதனின் 'மணல்வெளி அரங்கு'சிறுகதைத் தொகுதி அறிமுக அரங்கு எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை மண்டபத்தில் யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் அறிமுகவுரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் நிகழ்த்தவுள்ளார்.

மதிப்பீட்டுரைகளை யாழ். பல்கலைக்கழக பொருளியற் துறைத் தலைவர் வி.பி. சிவநாதன், அ. யேசுராசா, மாவட்ட ஆணையாளர் க குணராசா (செங்கையாழியான்) ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

(உ)

## சாட்டி மாவீரர் துயிலும் இல்லம் மாவீரர் தினத்திற்கு முன்னதாகப் புனரமைப்பு

(ஊர்காவற்றுறை)

வேலணை சாட்டியில்உள்ள மாவீரர் துயிலும் இல்லம் புனரமைக்கப்படவுள்ளது.

மேற்படி மாவீரர் துயிலும் இல்லத்தினை புனரமைப்பது தொடர்பாக தீவக மக்கள் நலன் காப்பகம் அண்மையில் கலந்துரையாடியுள்ளது:

தீவகத்தில் உள்ள மேற்படி மாவீரர் துயிலும் இல்லத்தை மாவீரர் தினத்திற்கு முன்னதாக புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

(உ-75)

## உள்ளூராட்சி மன்றங்களின் காலத்தை இனியும் நீடிக்க வேண்டாம் விநாயகமூர்த்தி எம்.பி

கொழும்பு))

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ளூராட்சி தேர்தல் மீண்டும் ஒத்தி வைக்கப்படுமானால்,உள்ளூராட்சி மன்றங்களின் காலத்தை நீடிக்காது உடனடியாக அவற்றை விசேட ஆணையாளர் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரவேண்டும்.

இவ்வாறு அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, தபால்மூல வாக்களிப்பு நடைபெறாத அம்பாறை மாவட்ட நிந்தவூர், திருக்கோவில் பிரதேச சபைகளுக்கான தபால் மூல வாக்களிப்புகள் அடுத்த மாதம் முதல் வாரத்தில் நடைபெறவுள்ளது என பிரதித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் ஒத்தி வைக்கப்பட்ட உள்ளூராட்சிமன்றத் தேர்தல் செப்ரெம்பர் 25 ஆம் திகதி நடத்தப்படவுள்ளதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-8)

## விளையாட்டு போட்டி

(மந்திகை)

தும்பளை கிழக்கு சனசமூக நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் சிறுமலர்கள் பாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டுப் போட்டி கடந்த சனியன்று நிலையத்தின் தலைவர் சபா இரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் இலங்கை வங்கியின் பருத்தித்துறைக் கிளை முகாமையாளர் எஸ். தேவராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

(உ-23)

## பேருந்து விபத்தில் 10 பேர் உயிரிழப்பு

(சென்னை)

தமிழ் நாடு தர்மபுரியில் நேற்று இடம்பெற்ற பேருந்து விபத்தொன்றில் 10 பேர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். 20 பேர் படுகாயமடைந்தனர்.

மேற்படி பேருந்து சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து அருகில் காணப்பட்ட சந்தைக் கட்டடத்துடன் மோதியதிலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

(உ-10)

### பொன் மஞ்சம் மேல் வருவாய்

சிவனார்தம் உளமார உபதேசம் உவந்தளித்த
திருமால் நன் மரு கோனே
ஜெகமீதில் உறைவோரும் சிவலோகத் தமர்வோரும்
சிரமாரத் தொழுவேனே

அவமாயை இருளோட அறியாமை அது வோட
அடியாரும் உடனோட
அறிவான தும்பெருக அழிவாவனவும் அகல
அருள்ஞானம் அருள்வோனே

சிவனார்தம் விழியோனே திருமாலின் மருகோனே
ஜெகஜோதி வடிவோனே
தேவயானை குற மானும் இருபாலும் அயலாக
தினம்வீதி வருவேலோய்

புவிமேவு அடியார்நின் புகழாரம் மனமார
பொன்மஞ்சம் வருவாயே
பொன்னுலகத் தமர்வோரும் பூதரரும் பொலி வார
பொன்மஞ்சம் வருவாயே

பண்டிதர் சி. கார்த்திகேசு (சேந்தன்)

# சங்கே முழங்கு

## சேர்ந்து செயற்பட்டால் யாழ். நகர் வளமாகும்

யாழ் குடா நாட்டின் பல பாகங்களிலும் இன்று வீதித் திருத்த வேலைகள் நடைபெற்று வருவது வரவேற்கத்தக்கதும், மகிழ்ச்சிக்குரியதுமான ஓர் விஷயமாகும். எனினும் சில கிராமசபை, சபைகளின் கீழ் வரும் வீதிகள் செப்பனிடப்பட்டிருக்கும் முறையிலும் பார்க்க நகர்ப்பகுதியில் வீதித் திருத்தம் மந்த கதியிலேயே செய்யப்படுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. நகரத்தில் உள்ள பிரதான பாதைகளில் பல இன்னும் செப்பனிடப்படாமல் இருக்கின்றன. இவை காலக்கிரமத்தில் கவனிக்கப்படும் என நம்புவோம்.

பொது வேலைகளையும், பொதுச் சொத்துக்களையும் பொறுத்தமட்டில் நம் மக்களில் சிலர் தமக்கென்றே சில பண்புகளை வளர்த்து வைத்திருக்கின்றனர். முக்கியமாக வீதிகளைப் பாவிப்பதில் நாம் காட்டும் உதாசீனம் வெட்கித் தலை குனிய வேண்டிய ஒன்றாக உள்ளது. எந்தக் கேடுகெட்ட செயலைச் செய்தாலும் அதற்கொரு சாட்டையோ, காரணத்தையோ சொல்லி நியாயப்படுத்துவதில் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத சிலர் நம்மிடையே உள்ளார்கள். சுயநலத்தின் வடிவங்களாக எல்லா மட்டங்களிலும் இருக்கும் அவர்களை அடையாளம் கண்டு அவர்களை அன்பு வழியில் திருத்தி எடுப்பதிலேயே நமது நகரினதும் மொத்த சமுதாயத்தினதும் முன்னேற்றம் தங்கி உள்ளது.

வீதித்திருத்தவேலைகள் நகரின் எப்பகுதியில் நடைபெற்றாலும், வீதிப் பாவனையாளர்கள் அது தமது நாட்டின், ஊரின் அல்லது வீதியின் நலனுக்காகச் செய்யப்படுகிறது என்பதையும், அது தாம் கட்டாயம் பொறுக்க வேண்டிய தற்காலிக கஷ்டமாகவும் அதனை ஒரு சிறு தியாகமாகவும் கருதி நடக்காமல், கற்கள் போடப்பட்டிருக்கும் இடங்களுக்கு மேலாக கண்டபடி வாகனங்களைச் செலுத்தி திருத்த வேலைகளுக்கு இடையூறு விளைவிப்பதை மிகச் சாதாரணமாகக் காணக்கூடியதாக இருக்கிறது. தமது அவசரமே முக்கியம் என்ற சுயநலமே அவர்களிடம் தலை தூக்கி நிற்கிறது.

கொதிக்கின்ற வெய்யிலில் நின்று ஊழியர்கள் கற்களைப் பரப்பிக்கொண்டு இருக்கும்போது, ஒரு சிலரே நிலைமைகளை உணர்ந்து தமது வாகனங்களை வேறு வீதிகள் மூலமாகத் திருப்பியும், சிலர் சைக்கிள் அல்லது மோட்டார் சைக்கிள்களை விட்டு இறங்கி ஒரு பக்கமாக உருட்டிச் சென்று பண்பாக நடந்து செல்லும் அதேநேரம், எது எக்கேடு கெட்டுப் போனாலும் தமது அவசரமே முக்கியம் என்று கருதும் சுயநலப் நோக்குடையோர், திருத்தப்பட்டுக் கொண்டிருக்கும் வீதிகள் ஊடாகவே சென்று இடையூறு விளைவிப்பதுடன், விபத்துக்களும் நேருகின்ற சம்பவங்கள் பல.

ஊழியர்களோ அல்லது அவ்வழியில் உள்ள பொதுநல விரும்பிகளோ ஏதாவது பேசினால், அவர்கள் சட்டம் பேசுகிறவர்களாகவும், துரோகிகளாகவும் கணிக்கப்படும் நிலைமைகளும் ஏற்படுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. மாட்டுக்கு மாடு சொன்னால் கேளாது, மணி கட்டிய மாடு சொன்னால் தான் கேட்கும் என்பது அவர்கள் நிலைப்பாடு!

வீதிகளைத் துப்புரவாக வைத்துக் கொள்வது இங்கு குறிப்பிட வேண்டிய மற்றுமோர் விஷயமாகின்றது. இந்த விஷயத்தில் மாநகர சபையானது வாகனத் தட்டுப்பாடு, ஊழியர் பற்றாக்குறை ஆகியவற்றால் முற்றிலும் திருப்திகரமாக செயல்படமுடியாதிருப்பது உண்மையாக இருக்கலாம். எனினும் இவ் விஷயத்தில் அவ்வப்பகுதி மக்களும் நகரசபையும் விழிப்புணர்வுடனும் புரிந்துணர்வுடனும் இணைந்து செயல்பட்டால் கூடிய பயன்கள் கிடைக்க வாய்ப்புகள் உண்டு என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள்.

நகரசபை ஊழியர்களும் வாகனங்களும் வீதிக் குப்பை கூழங்களை எப்படித்தான் அகற்றினாலும், அநேகமான வீதிகளிலும் வளவுகளிலும் குப்பை கூழங்கள் தேங்கிக் கிடந்து நாற்றமடிப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இவற்றின் தாக்கம் பற்றிய புரிந்துணர்வு மக்களுக்கும், நகரசபை ஊழியர்களுக்கும் ஏற்படுத்தப்பட வேண்டியது மிக முக்கியமாகும். இது குறித்து போதிய கண்காணிப்பும் இருப்பதாகத் தெரியவில்லை.

தத்தமது வீதியைத் துப்புரவாகவும் ஒழுங்காகவும் வைத்திருப்பது ஒவ்வொரு குடும்பத்தினருடையதும் கடமையாகும். வீதிச் சுத்திகரிப்பு எந்தெந்த நாட்களில் நடைபெறும் என்பதை அந்தந்த வீதியில் இருப்பவர்கள் அனைவருக்கும் அறிவுறுத்தி, அதற்குரிய நேரத்தில் குப்பை கூழங்களை தயாராக வைத்திருக்குமாறு மக்களுக்கும், அவற்றைத்தவறாது அகற்றும்படி சுத்திகரிப்பு ஊழியர்களுக்கும் கண்டிப்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுமாயின் எமது நகரத்தை சுத்தமாக வைத்திருக்க முடியும்.

ஒருவரை ஒருவர் குறைசொல்லுவதாலும் தவறுகளை நியாயப்படுத்துவதாலும் எந்தப் பலனும் கிடைக்கப் போவதில்லை. பொதுநலம் பேணுதல் தனக்கும் தன் சந்ததிக்குமே நன்மை பயக்கப் போகிறது என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து புரிந்துணர்வுடன், செயல்பட்டு விரைவில் அழகிய ஒரு யாழ். நகரைக் கட்டி எழுப்புவதில் எல்லோரும் பங்கெடுப்போம்.

த. சகாதேவன்,
வண்ணார்பண்ணை.

# இனப்பிரச்சினைத் தீர்வில் அரசும் விடுதலைப் புலிகளும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர்

## கண்காணிப்புக்குழுத் தலைவர் பாராட்டு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளும் அரசாங்கமும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றனர்.

தமிழீழவிடுதலைப் புலிகளின் முல்லைத்தீவு- வாகரை கடற்போக்குவரத்து இதனை எடுத்துக்காட்டுகிறது என இலங்கை கண்காணிப்புக்குழுவின் தலைவர் ரொண்பியூறு ஹெவ்டே விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

தமிழீழவிடுதலைப்புலிகளின் கடற்போக்குவரத்து சவால்களை தோற்றுவிக்கும், ஒரு நிகழ்வாக அமைகின்றபோதிலும், இருதரப்பினரிடையேயுள்ள பரஸ்பர உறவுகளையும் நம்பகத் தன்மையினையும் வெளிக்கொண்டுவருவதாக அமைகிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் புலிகளின் முதலாவது கடற்பயணம் வெற்றிகரமாக அமைந்தது. புதிய இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே அவர்கள் இப்பயணத்தை மேற்கொண்டிருந்தனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தமிழீழ விடுதலைப்புலிகள் 170 பேர் படகுகள் மூலம் முல்லைத்தீவில் இருந்து வாகரைக்கு கண்காணிப்புக்குழுவின் மேற்பார்வையில் சென்றமை குறித்தும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-8)

## 376 பேருக்கு கண் சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் கற்றாக்கண்சத்திர சிகிச்சையை மேற் கொண்டு வரும் பிரிட்டிஷ் வைத்தியநிபுணர்குழு நேற்று நண்பகலுடன் தமது சத்திர சிகிச்சைப் பணியை முடித்தது.

கடந்த 13 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்தகண்சத்திர சிகிச்சையில் 376 பேர்சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர்.

13 பேர் அடங்கியமேற்படி வைத்திய நிபுணர் குழுநாளை லண்டன் பயணமாகவுள்ளது. (த-6,2)

## மன்னார்க் கடலில் கஞ்சாவுடன் ஐவர் கைது

(மன்னார்)

மன்னார் கடற்பாப்பில்பட கொன்றைச் சுற்றிவளைத்து கடற்படையினர் மேற்கொண்ட தேடுதலின்போது கஞ்சாவுடன் ஐந்துபேர்கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினர் அண்மையில் அதிகாலை 2 மணிக்கு இப்படகினை வழிமறித்து தேடுதல் மேற் கொண்டனர்.

படகில்கைது செய்யப்பட்டவர்களில் மூவர் இந்தியர்கள் ஏனைய இருவரும் இலங்கையைச் சேர்ந்தவர்களெனத் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## முகாமைத்துவ வதிவிடப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவக கல்வி முகாமைத்துவ வாண்மை அபிவிருத்தி நிலையத்தினால் 1 ஏபி, 1 சி அதிபர்களுக்கான முகாமைத்துவ வதிவிடப் பயிற்சி நெறி பாதுக்கையில் நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரையான 9 தினங்கள் இடம்பெறவுள்ள இவ்வதிவிடப்பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்பும் அதிபர்களை 01-859254, 01-859661, 021-2431 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் காரியாலய நேரத்திலும், 01-729544 என்ற தொலைபேசி இலக்கத்துடன் காரியாலய நேரத்தின் பின்னரும் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## யாழ். துரையப்பா விளையாட்டரங்கை நவீனமயப்படுத்தத் திட்டம்

(கொழும்பு)

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்குநவீனவசதிகளடங்கியதாக புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

இதற்கான மதிப்பீட்டு வேலைகள் தற்போது முடிவடைந்துள்ளன.

இதன் முதற்கட்டமாக இம் மைதானத்தைசுற்றிவர சுற்றுமதில் அமைக்கப்பட இருப்பதுடன், பார்வையாளர்களுக்கான இருக்கை வசதிகளும் செய்து கொடுக்கப்படவுள்ளன

இந்தவிளையாட்டு அரங்கை புனரமைப்பதற்கான நிதியை புனர்வாழ்வு அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சு வழங்கவுள்ளது. (த)

## கூடைப்பந்தாட்டம் வேம்படி மகளிர் கல்லூரி அணி வெற்றியீட்டியது

(சுண்டுக்குளி)

ஹற்றன் நஷனல் வங்கி யாழ். கிளையினால், யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையில், நடத்தப்பட்டு வந்த கூடைப்பந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டங்களும் பரிசளிப்பு வைபவமும், கடந்த வெள்ளியன்று யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி, விளையாட்டரங்கில் நடைபெற்றது.

முதலில் இடம் பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில், யாழ். வேம்படி மகளிர் கல்லூரி அணி அதனைஎதிர்த்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை கடைசி நிமிடத்தில் பெற்ற ஒரு புள்ளியால் அதாவது 34:33 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றியீட்டி சாம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணி, அதனை எதிர்த்தாடிய வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரியை 33:21 என்ற புள்ளிகள் கணக்கில் இலகுவாக வென்று சாம்பியன் ஆனது.

இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக ஹற்றன் நஷனல் வங்கியின் நிர்வாக முகாமைத்துவ பணிப்பாளர் சி.டி விஜபதிலக கலந்து கொண்டு பரிசில்களைவழங்கினார். (உ-110)

## கலாமன்ற ஏற்பாட்டில் சிறுவர் வதிவிட பாசறை

(யாழ்ப்பாணம்)

திருமறைக்கலாமன்றத்தின் சமாதானச் செயற்பாடான கலைப்பாலம் நிகழ்வுகளில், ஓரங்கமாக நாளைமுதல்எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை வரை கொழும்பில் சிறுவர் வதிவிடப் பாசறை ஒன்று நடத்தப்படவுள்ளது.

இலங்கையின் பலபிரதேசங்களிலுமுள்ள திருமறைக் கலாமன்றங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிறுவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

திருமறைக் கலாமன்றம் ஏற்படுத்தியுள்ள 15 சிங்கள, தமிழ் சமாதான வலயங்களில் இருந்து 150 சிறார்கள் இப் பாசறையில் கலந்து கொண்டு தமது கலை, கலாசாரம் சார் விழுமியங்களைப் பரிமாற்றம் செய்து கொள்வதோடு தமது ஆற்றல்களையும் ஆளுமைகளையும் விருத்தி செய்துதமக்கிடையே புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொள்ளும் வகையில் நிகழ்வுகள்ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. (உ)

## வர்த்தக நிலையம் இலங்கையில் அமையும்

(கொழும்பு)

வர்த்தக நடவடிக்கைகளை விரிவாக்கும் வகையில், இலங்கையில் வர்த்தக நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாக வர்த்தகநுகர்வோர்விவகார அமைச்சர் ரவிகருணாநாயக்கா தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொண்டுவந்திருந்தகர்நாடக மற்றும் பெங்களூர் வர்த்தக கைத்தொழில் சம்மேளனங்களின் உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடியபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

வர்த்தக நோக்கங்களை மையமாக கொண்டு அமைக்கப்படவுள்ள இந்நிலையம் மூலம், இலங்கையிலுள்ள வளங்கள், உற்பத்திகள் வர்த்தக வாய்ப்புகள்போன்றவர்த்தகத்துறை விபரங்களும்,

இலங்கையின் எழில் நிறைந்த இடங்கள், கலாசார பண்பாடுகள் போன்ற உல்லாசப் பயணத்துறை விபரங்களும் பெறக்கூடியதாக இருக்கும். (உ)

# இன்று ஒரு தகவல்

## ஜடாயுவின் சம்பவம்

இராமன், இலட்சுமணன் சீதை ஆகிய மூவரும் தண்டகவனத்தில் இருந்த போது அங்கே சுகுப்தி, குப்தி என்ற இரண்டு சாரணமுனிவர் கள் இருந்தனர். இராமன் பணிவுடனும், பக்தியுடனும் அமைதியே உருவமான அந்த முனி புங்கவர்களுக்கு ஆகாரம் கொடுத்து மிக்க மகிழ்ச்சி அடைந்தான் அவன்கொடுத்த ஆகாரதானத்தின் சிறப்பினால் மலர்மாரி பொழிந்தது. மணமுள்ள குளிர்ந்த காற்று வீசியது தேவமுரசு முழங்கிற்று ஜய ஜய ஒலிஎழுந்தது. மணி மாரிபெய்தது. இவைஐந்தும் வியப்பிற்குரிய செயல்களாகும். இராமனும், இலட்சுமணனும், சீதையும் முனிவர்களுக்கு ஆகாரம் கொடுத்த போது அங்கிருந்த மரத்தின் மீது அமர்ந்திருந்த பருந்து ஆகாரதானத்தைப் பக்தியுடன் பார்த்தது, முனிவரின் உருவத்தைக் கண்டவுடனே அவர்களின் தவத்தின் பெருமையினால் அந்தப் பருந்துக்குத் தன் முற்பிறவியின்நினைவுகள் வந்தன.

முன்பு நான் மனிதப் பிறவியில் இருந்த போது சோம்பலுக்கு உட்பட்டு, விவேகம் இழந்து தவம் செய்யாமல் காலத்தை வீணாகக் கழித்து விட்டேன். அதனால் தான் நான்இப்பொழுதுஇந்தக்கீழ்த்தரமான பிறவியில் வந்து பிறந்துள்ளேன். நான் எந்த வழியைக் கடைப் பிடித்துஇந்தப் பிறவியிலிருந்து விடுபடுவது? என்றுமனத்தில்நினைத்த அந்தப் பறவைமரத்திலிருந்து கீழ இறங்கி வந்தது. தரையில் முனிபுங்கவர் பாதங்களைக் கழுவிய நீரால் அது தன் உடலைப்புனிதப் படுத்திக் கொண்டது தவத்தோர் பாதங்களைக் கழுவிய தண்ணீரில் பறவைமூழ்கியவுடனே அதன் உடல் முழுவதும் பொன் வண்ணமாகவும் ஒளிவீசும் மணியைப் போன்று ஒளிமயமாகவும் ஆகிவிட்டது.

இதைக் கண்ட இராமன் முனிவர்களிடம் இந்தப் பறவையின் உடல் முன்பு அழகு குறைந்து மங்கிய ஒளியுடன் கூடியதாக இருந்தது. ஆனால் நொடிப்பொழுதில் இதன் உடல் ஒளிமயமாகவும் பொன் வண்ணமாகவும் ஆனதற்குக் காரணம் என்ன? இதன் முற்பிறவியின் வரலாறு என்ன? என்று கேட்டான். சுகுப்தி முனிவர் கூறினார். முன்பு இந்தப் பறவை செல்வமும் எழிலும் சூழ்ந்த தண்டகம் என்றநகரத்திற்கு வேந்தனாக இருந்தது. அப்பொழுது செருக்கினால் நல்லவை, தீயவைகளை அறியாமல் மனம் போனபோக்குப்படி அலைந்தும் திரிந்து கொண்டும் இருந்த வேளையில் தவவலிமை படைத்துத் தியானத்தில் ஆழ்ந்திருந்த ஒருமுனிவரின் கழுத்தில் இறந்த பாம்பை இவன் போட்டுவிட்டான். கொடுமைச் செயலில் ஈடுபாடு கொண்ட இவன் பல முனிவர்களுக்குத் தொல்லை கொடுத்து அவர்களை மரணத்திற்கு உட்படுத்திவந்தான். இத்தகைய கொடிய பாவத்தைச் செய்ததன் பயனாக நரகத்தில் போய்ப் பிறந்தான். அங்கிருந்து பல விலங்குப் பிறவிகளிற் சுழன்று, பல இன்னல்களை அனுபவித்து இப்பொழுது இந்தப் பிறவியில் பிறந்துள்ளான என்றார்.

பிறகு முனிவர் பறவையிடம், 'பறவைகளுக்கு அரசனே! நீ அஞ்சவேண்டாம், வருத்தப்படவேண்டாம். நடக்கவேண்டியது நடந்து விட்டது நடந்ததைப் பற்றிக் கவலைப்படவேண்டாம். இப்பொழுது நீ தவவிரதத்தைக் கடைப்பிடி இனி உனக்குத் துன்பம் வராது. நீ அமைதியைக் கடைப்பிடி, எந்த உயிரையும் கொல்லாதே; பொய், களவு, காமம் ஆகியவற்றை விடு, முழுப்பிரம்மச்சரியத்துடன் இருந்து பொறுமையைக் கடைப்பிடி, பிறரிடம் அன்பாகவும், பரோபகாரமாகவும் நடந்து கொள், தர்ம வழியைப் பின்பற்று, தூய வாழ்க்கை நடத்து, கூடிய மட்டும் உபவாசம் கடைப்பிடி' என்று கூறினார்.

முனிபுங்கவர் உபதேசிக்க, அந்தப்பறவை தலைகுனிந்து அவர் கூறியவாறு விரதத்தைக் கைக்கொண்டது, சீதைக்கு அந்தப்பறவையிடம் கருணை இருந்ததனால் முனிவர் சீதையிடம், 'கொடிய விலங்குகள் வாழும் இந்தக் காட்டில் நீ இந்தப்பறவையை நன்கு பாதுகாக்க வேண்டும்' என்றார். அந்தப்பறவையின் இறகு தங்கத்தின் வண்ணம் போன்ற ஒளிமயமாக இருந்தமையால் அதற்கு ஜடாயு என்ற பெயர்வழங்கலாயிற்று. அதனிடம் அற்புதமான அறப்பற்று இடம் கொண்டது, கொடுமையான இயல்புடைய பறவையின் பிறவியில் தோன்றிய அந்தப்பருந்தின் உள்ளம் கருணையுடையதாகவும், பிறர் மனதைக்கவரும் வண்ணமாகவும் இருந்தது.

அந்தப் பறவைபக்திக்குஉட்பட்டு அடக்கத்துடன் மூன்று வேளையும் சீதையுடன் ஜினபகவான், சித்தபகவான், முனி புங்கவர் ஆகியவர்களை வணங்கி வந்தது. கருணைக் கடலான சீதை அதன் மீது அன்பு கொண்டு அதைத் தனதாக்கக் கருதலானாள். சீதையின் அழகிற்குக் கட்டுண்டு அவளை அடையும் பொருட்டு மாசுமனம் படைத்த இராவணன் அவளைத் தூக்கிக் கொண்டு போனபோது, செய்நன்றி மறவாத ஜடாயு இராவணன், மீது பாய்ந்து தன் முழுப்பலத்தையும்செலுத்திச் சீதையைக்காப்பற்றப்போரிட்டது. புலனடக்கமில்லாத மயக்கத்தில் மூழ்கிய இராவணன் தன்னலத்தைச் சாதிக்கும் சக்திக்குக் குறுக்கே நின்ற அந்தப் பறவையைக் கடுமையாகத் தாக்கினான். இதனால் அது மயக்க முற்று வீழ்ந்தது.

இராமன் திரும்பி வந்த போது அவ்விடத்தில்சீதைஇல்லாததையும், ஜடாயுமரணத்துடன் போரிட்டுக் கொண்டிருப்பதையும் கண்டான். அப்போது வருத்தமுற்று, பறவை மீது கருணை கொண்ட இராமன் மரணத்துடன்போராடிக் கொண்டிருந்த ஜடாயுவுக்கு 'ணமோங்கார' மந்திரம் என்னும் பஞ்ச மத்திரத்தைக் காதில் ஓதினான். இந்த மந்திரத்தைக் கேட்டதன் விளைவாக ஜடாயுதேவலோகத்தில் தேவனாகப் பிறந்தது.

தொகுப்பு;
சுவாமிகமலாத்மானந்தர்

## டெங்கு ஒழிப்பு

(மானிப்பாய்)

வலி மேற்கு பிரதேச சபைப் பிரிவில் அமுல் படுத்தப்பட்டுள்ள நுளம்புக்கட்டுப்பாடு டெங்கு ஒழிப்பு நடவடிக்கை இவ்வாரம் வட்டுக்கோட்டை' அராலி, சுழிபுரம், சங்கானை ஆகிய இடங்களில் இடம் பெற்றுவருகின்றன. (உ-232)

# பலஸ்தீனர்களும் இஸ்ரேலியர்களும் யுத்தத்தைக் கைவிட வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த வேண்டுகோள்

(கொழும்பு)

பலஸ்தீனர்களும், இஸ்ரேலியர்களும் யுத்தத்தை கைவிடும் முயறசிகளில் ஈடுபட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கேட்டுக் கொண்டுள்ளார்.

இலங்கை சோனக இஸ்லாமிய நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவ்விரு தரப்புகளுக்கு மிடையே 40 வருட காலமாக இடம் பெற்று வரும் யுத்தம் எவ்வித பலனையும் கரவில்லை- மாறாக அழிவுகளையே ஏற்படுத்தியுள்ளது.

பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் தனது சொந்த நாட்டிலேயே சிறைக் கைதியாக இஸ்ரேலியர்களால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

பலஸ்தீன பெத்லஹேம் நகரில் நிலை கொண்டுள்ள இஸ்ரேலியப் படைகள் கட்டம் கட்டமாக நகர்த்தப்பட்டு வருவது, ஒரு நல்ல சமிஞ்ஞை எனவும் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (உ-8)

# கிழக்கு முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்படின் கடும் நடவடிக்கை

## ஜனாதிபதி செயலகம் பேரியலுக்கு கடிதம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தின் தற்போதைய பாதுகாப்பு நிலைவரங்கள் குறித்து ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க உன்னிப்பாக ஆராய்ந்து வருகிறார்.

கிழக்கின் பாதுகாப்புக் குறித்து நு.ஆ தலைவி திருமதி பேரியல் அஷ்ரப் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்தமை தொடர்பில் ஜனாதிபதி செயலகம் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் வாழ்ந்துவரும்முஸ்லிம்களுக்கு தற்போதையபாதுகாப்புநிலைவரங்கள் குறித்து பாதிப்புஏற்படும் சந்தர்ப்பத்தில் அதற்கு ஜனாதிபதி கடுமையான நடவடிக்கை எடுப்பார் எனவும், முஸ்லிம் மக்கள் செறிந்து வாழு கிழக்கு மாகாணத்திலுள்ள படைமுகாம்கள் முழுவதும் அகற்றப்பட்டால், கிழக்கின் பாதுகாப்பு நிலைமைகளை கையாளஎடுக்கப்படும் முன்னேற்பாடுகள் பற்றி தகவல்களை வழங்குமாறும் பேரியல் அஷ்ரப்பிடம் கேட்கப்பட்டுள்ளது.

கிழக்கில் மாற்றுப் பாதுகாப்பு ஏற்பாடுகள்எதனையும் மேற்கொள்ளாது இங்குள்ள இராணுவ மற்றும் அதிரடிப் படை முகாம்களை அகற்றினால், அதனால் ஏற்படக் கூடிய விளைவுகள் குறித்து பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்குகடந்தஜூலை மாதம் 31 ஆம் திகதி ஜனாதிபதி கடிதம் ஒன்று அனுப்பி வைத்துள்ளதாகவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-8-10)

## மணவாளக் கோலம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சங்காபிஷேகமும் மணவாளக் கோல உற்சவமும் நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளன. (உ)

## தெய்வீக நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலத்தில் வட பிரதேச இந்துப்பேரவை, 63 நாயன்மார் குருபூசை மடத்தில் நடத்திவரும் தெய்வீக நிகழ்ச்சிகளில் இன்று, 'சைவத்திருமுறைகள்' என்ற பொருளில் சைவப் புலவர் க. திருஞானசம்பந்த பிள்ளை சொற்பொழிவாற்றவுள்ளார். (உ)

## தெய்வீக இசையரங்கில் இன்று

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்றம் நடத்தும் நல்லூர் உற்சவ காலத்தை ஒட்டிய தெய்வீக இசையரங்கில் பத்தாம் நாளான இன்று எஸ்.குமாரசாமியின் பாட்டுக் கச்சேரி பக்கவாத்தியங்கள் சகிதம் இடம்பெறவுள்ளது. (உ)

## இலங்கையர் நாடு திருப்பினர்

(யாழ்ப்பாணம்)

கடந்தகால யுத்த அனர்த்தங்களால் இந்திய அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருந்த இலங்கைத் தமிழ் அகதிகள் 9 பேர் அண்மையில் படகு மூலம் இந்திய மீனவர்களின் துணையுடன் நெடுந்தீவுக் கரையோரத்தில் வந்திறங்கினர்.

3 பெண்கள், 2 ஆண்கள் 4 குழந்தைகள் உள்ளடங்கிய இவர்கள் தற்போது நெடுந்தீவில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (உ-6)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

# உபாலி குணரட்ணவை கைது செய்யுமாறு உத்தரவு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உபாலி குணரட்ணவை கைதுசெய்யுமாறு கொழும்பு மேல்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

1996ஆம் ஆண்டு கொலன்னாவை அரசாங்க தொழிலகமொன்றில் அதிகாரியொருவரைஅச்சுறுத்தியமைதொடர்பாகஅண்மையில் இடம்பெற்ற வழக்குவிசாரணைக்கு சமுகமளிக்க தவறியதையடுத்தே இவரைக்கைது செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (உ-10)

நாரந்தனை தாக்குதல் சம்பவம்

# மனித உரிமைஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

கடந்த வெள்ளிக்கிழமை நாரந்தனைப் பகுதி களஞ்சியம் ஒன்றுக்குள் புகுந்து அதன் விற்பனை முகாமையாளர் மற்றும் சீவல் தொழிலாளர்களை கடற்படையினர் கண்மூடித்தனமாகத் தாக்கியமை தொடர்பாகசம்பந்தப்பட்டவர்களால் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கடற்படை அதிகாரிகள் மீதான விசாரணை எதிர்வரும் 27ம் திகதி செவ்வாய்க்கிழமை மு ப. 10 மணிக்கு யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக விசாரணை அதிகாரி றுவான் சந்திரசேகர தெரிவித்தார்.

இதேவேளை, இச்சம்பவத்தை நேரில் கண்ட அப்பகுதி பொதுமக்களை யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

இவ் விசாரணை அறிக்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கொழும்பு தலைமையகத்திற்கு அனுப்பிவைக்கப்படவுளளதும் குறிப்பிடத்தக்கது. (உ-6)

# கால்நடை வளர்ப்போர்க்கு பயிற்சிக் கருத்தரங்கு

(மந்திகை)

வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் கால்நடைகளை வளர்ப்போருக்கான இருநாள் முழுநேரப் பயிற்சிக் கருத்தரங்கு விரைவில் நடத்தப்படவுள்ளது.

இப் பயிற்சிக் கருத்தரங்கு இரு பிரிவாக தொண்டமானாற்றிலும், புலோலியிலும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்படி பயிற்சிக் கருத்தரங்கில் கலந்துகொண்டு கால்நடைவளர்ப்புத்தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்ளுமாறு இளைஞர் - யுவதிகள மற்றும் ஆர்வலர்களுக்கு அப்பகுதிக் கால்நடை வைத்திய அதிகாரி வசீகரன் அழைப்பு விடுத்துள்ளார்.

இதற்கான பதிவுகளை புலோலியில் உள்ள கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையில் உடன் மேற்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுளளது. (உ-23)

### ஜனாதிபதிக்குப் பாராளுமன்றத்தைக் கலைக்கும்

# எண்ணம் இல்லாவிட்டால்அரசியல் யாப்பு

# சீர்திருத்தத்திற்கு ஆதரவளிக்க வேண்டும்

## காணி அமைச்சர் ராஜிதசேனரட்ண

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்கவுக்கு பாராளுமன்றத்தை கலைக்கும் எண்ணம் இல்லாவிட்டால், அரசியல் யாப்பு சீர்திருத்தத்திற்கு ஆதரவளிக்கவேண்டுமென்று காணி அமைச்சர் ராஜிதசேனரட்ண தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து பல சந்தர்ப்பங்களில் ஜனாதிபதி வாக்குறுதிகளை அளித்திருந்தாலும், அதனை அவர் நிறைவேற்றத் தவறிவிட்டார் எனவும் அமைச்சர் ராஜித சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசின் உள்ளார்ந்தநோக்கங்களை புரிந்து கொண்ட எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் யாப்பு திருத்தங்களை மேற்கொள்வதற்கு ஆதரவுடுள்ளார். தெரிவித்துள்ளனர்.

எனவே பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களினது இவ்ஆதரவைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதி ஒத்துழைப்பார் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (உ-8)

## விவசாயக் குழுக்கூட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச விவசாயக் குழுக் கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப.10.00 மணிக்கு ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது:

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படிக் கூட்டத்தில் விவசாயிகள் சம்மேளனங்களின் பிரதிநிதிகள், கமநல சேவைத் திணைக்கள மற்றும் விவசாயத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளனர். (உ-75)

# தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கு பாதுகாப்பு வழங்க முடியாது

## பாகிஸ்தான் கைவிரிப்பு

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலின் போது கண் காணிப்பு பணிகளில் ஈடுபடவிருக்கும் ஐரோப்பிய யூனியன் கண்காணிப்பாளர்களுக்கு பாதுகாப்புவழங்க முடியாது என பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில் நடைபெறவுள்ள இத்தேர்தலை ஐரோப்பிய யூனியன் கண்காணிப்பதை பாகிஸ்தான் அரசு வரவேற்றுள்ள அதேவேளை அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க பாதுகாப்புவழங்க முடியாது என கவலைதெரிவித்துள்ளது.

ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த 164 பேர் இத்தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் முன்னாள் பிரதமர்கள் நவாப் செரீப், பெனாசீர் பூட்டோ ஆகியோர் போட்டியிட முடியாதவாறு பாகிஸ்தான் ஜனாதிபதி பெர்வேஷ் முஷராப் தனக்கு சாதகமான புதிய சட்டங்களை இயற்றியுள்ளதால், பாகிஸ்தான் தேர்தலை கண்காணிப்பதற்கு வெளியமைப்பு ஒன்றின்கண்காணிப்பு அவசியம் என பாகிஸ்தானின் கட்சிகள் பலவும் கருத்து வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட உள்ளூராட்சி சபைக்களுக்கான தேர்தல் சம்பந்தமான ஒழுங்குகளை மேற் கொள்வது தொடர்பான கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் யாழ் செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் து:வைத்திலிங்கம் தலைமையில் இடம்பெற்றது

இந்தக் கூட்டத்தில் யாழ் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ்.நடராஜா மற்றும் யாழ் மாவட்ட தேர்தல் அலுவலக அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

தேர்தல் சம்பந்தமாகவும் தேர்தலுக்கான முன் ஆயத்த நடவடிக்கைகள் மேற்கொள்வது தொடர்பாகவும் இதில் ஆராயப்பட்டது.

உள்ளூராட்சித்தேர்தல்திட்டமிட்டபடி அடுத்த மாதம் 25 ஆம் திகதி இடம்பெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

தேர்தலுக்கான முன் ஆயத்த நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் யாழ் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ். நடராஜா இச் சந்தர்ப்பத்தில் தெரிவித்தார். (உ- 6

## தேவாரதம் படகுச் சேவை இடை நிறுத்தம்

(ஊர்காவற்றுறை)

எழுவைதீவு, அனலைதீவு, நயினை தீவு ஆகியவற்றுக்கிடையே பயணிகள் சேவையில ஈடுபட்டு வந்த 'தேவாரதம்' படகுச்சேவை கடந்த ஞாயிற்றுக் கிழமை முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையினால் நடத்தப்பட்டு வந்த இப்படகுச்சேவைஇடைநிறுத்தப்பட்டமைக்கு படகில் ஏற்பட்ட இயந்திர கோளாறே காரணமாகும். (உ- 75)

### கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சங்கரத்தைபத்திரகாளிஅம்மன் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட வசந்த மண்டப கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. (உ-2,4)

### மக்கள் வங்கி

## பதவிநிலை உதவியாளர் நேர்முகதேர்வு கொழும்பில்

(யாழ்ப்பாணம்)

மக்கள்வங்கி பதவிநிலை உதவியாளர்-பயிலுநர்பதவிக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 29, 30ஆம் திகதிகளில் மக்கள் வங்கி, பணியாளர் பயிற்சிக் கல்லூரி, இல. 8, விஜேவர்த்தனா மாவத்தை கொழும்பு - 10 என்னும் முகவரியில் இடம்பெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விபரம் வருமாறு,

செல்வி என். அருணகிரிராஜா, செல்வி வி. ஜெயக்குமார், எஸ். பகீரதி, செல்வி பி மனோராஜ், செல்வி எம். மகேந்திரன், செல்வி எம். ஸ்ரீதரன், எஸ். ஜெறோன், பி. முருகதாஸ், செல்வி எம். சதாசிவசர்மா, என். தனேஸ் செல்வி எம். எஸ். யோகேந்திரம், செல்வி இசற். கணேஸ்வரன், எஸ். எஸ். சிவந்தா செல்வி வி. பரமநாதன், பி. சீராளன், செல்வி எஸ். சிவராஜா, எஸ். அனுஷா, செல்வி எஸ். எக்ஸ். ஜெயச்சந்திரா கே. கோபிநாத், செல்வி வி. நரேந்திரன், ரி. எழில்மேனன் செல்வி பி. கைலாசபதி, செல்வி எஸ். கனகலிங்கம், எ. எம். நிர்மலா, ஜி. ஹைறின் ஆர்க், எஸ். கிருஸ்ணகுமாரன் எஸ். அகல்யா, எஸ். எஸ். பகீரதன், ஜி. சஜமுகன், என். உதயசேகர், எஸ். ஆரணி, செல்வி பி. பாலசுப்பிரமணியம், திருமதி வி. குமரன், செல்வி எஸ். சின்னத்தம்பி, பி. ஹரிகரேந்திரா, ஆர். கமலமீரா, செல்வி ஜி. மாணிக்கவாசகர், ஆர். கம்சலா, செல்வி எஸ். நடராஜா ஜே. முத்துக்குமாரி, எஸ். கோகுலகாந்த், செல்வி பி. ஆர். செந்திநாதன். (உ)

### மனித உரிமைகள் ஆணைக்குழு

## யாழ்.அலுவலக சேவை நாள்முழுவதும் நடக்கும்

(யாழ்ப்பாணம)

குடாநாட்டு மக்களின் மனித உரிமைகளைப் பேணும் விதமாக, மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகம் 24மணி நேரமும் செயற்படவுள்ளது.

மனித உரிமைகள் மீறலோ அல்லது உயிருக்கு அச்சுறுத்தலோ ஏற்படுமிடத்து எந்நேரமாயினும் தம்மிடம் வந்து முறையிடலாம் என புதிய இணைப்பாளரும், விசேட விசாரணை அதிகாரியுமான றுவான் சந்திரசேகர் தெரிவித்துள்ளார். (உ-6)

## செயல் முறை வகுப்பு

(யாழ்ப்பாணம்)

அரச அலுவலர்களுக்கான தொலைக் கல்வி கணனிப் பயிற்சி நெறியில் கலந்து கொண்ட முதல் நான்குதொகுதியினர்களுக்கான இன்ரநெற் ஈமெயில் பிரயோகம் தொடர்பான செயல் முறை வகுப்பு இன்று இடம் பெறவுள்ளது.

காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை முதற்பிரிவாகவும் பி.ப 1 மணியிலிருந்து பி.ப. 4 மணிவரை இரண்டாவது பிரிவாகவும் செயல் முறை வகுப்பு இடம் பெறவுள்ளதாக யாழ். மாவட்ட தொழிற்றுறைத் திணைக்கள இணைப்பாளர் பி.ராகவன் அறிவித்துள்ளார். (த-5)

## மணல்காட்டில் 30 ஏக்கரில் மர நடுகைத் திட்டம்

(மந்திகை)

வடமராட்சி கிழக்கு மணல்காடு பிரதேசத்தில்30ஏக்கர் நிலப்பரப்பில் மர நடுகைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது

சூழல பாதுகாப்புக்குழுவின் ஏறபாட்டில் அமுலபடுத்தப் படவுள்ள இத்திட்டத்திற்கு சுமார் 5இலட்சம் நிதிதேவையெனமதிப்பிடப்பட்டுள்ளது.

இத் திட்டமானது அடுத்த மாதம் முதல் அமுல்படுத்தப் படவுள்ளதாக சூழல் பாதுகாப்புக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-23)

### த. வி. கூ. முன்னாள் தலைவர்

## அமிர்தலிங்கம் நினைவுக் கூட்டம் லண்டனில்

(தென்மராட்சி)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அமரர் அ. அமிர்தலிங்கத்தின் 75 வது பிறந்த தினத்தினை முன்னிட்டு தமிழர்விடுதலைக்கூட்டணியின் லண்டன் கிளையின் ஏற்பாட்டில் எதிர்வரும் 26 ஆம் திகதி லண்டனில் இருபுத்தகங்கள் வெளியீடும், நினைவுக்கூட்டமும் இடம்பெறவுளளது.

இந்நிகழ்வுகளில் பங்கு கொள்ளும்பொருட்டு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி எம். பி, செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன் எம். பி. மற்றும் மாவை. சேனாதிராஜா எம். பி.ஆகியோர் லண்டன் பயணமாகவுள்ளனர்.

அதேசமயம் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி அமரர் அ. அமிர்தலிங்கத்தின் புத்தக வெளியீட்டு விழா கனடாவிலும் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வுகளில் தமிழர் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, எம். கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் பங்கு கொளளவுள்ளனர். (உ-77)

# மனித பாவனைக்கு உதவாத

# இறைச்சி குடா நாட்டில் விற்பனை

## சுகாதார வைத்திய அதிகாரி எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகரசபையின் கொல்களத்தில் பரிசோதித்து வெட்டப்பட்டு விற்பனை செய்யப்படும் இறைச்சியையே மனித பாவனைக்கு உகந்தது என்பதை என்னால் உறுதிப்படுத்த முடியும்.

யாழ் மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரியினால் வெளியிடப்பட்டுள்ள பத்திரிகைக் குறிப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது

அக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சமீபகாலமாகவெளியிடங்களிலிருந்து எவரதுபரிசோதனையுமின்றி கொண்டுவரப்பட்ட பன்றி, மான், மரை போன்ற மிருகங்களின் இறைச்சி வகைகள் தற்போது மாநகர சபை எல்லைக்குட்பட்ட சந்தைகளில் விற்பனை செய்யப்படுவதாக எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

எமது கொல்களத்தில் பரீட்சித்து வெட்டப்படாத எந்தவொரு மிருகத்தினது இறைச்சியும் மனித பாவனைக்கு உகந்தவையெனக் கருத முடியாது. சமீபத்தில் பாசையூர் சந்தையில் மேற்படி சட்டவிரோத இறைச்சி கைப்பற்றப்பட்டு இவை முழுமையாக அழிக்கப்பட்டதையும் இவ்விடத்தில்நினைவுபடுத்துகின்றேன். பாவனைக்குதவாத இறைச்சியை விற்பனை செய்வோர் மீது சட்டநடவடிக்கை எடுப்பதும் தவிர்க்க முடியாததாகும்.

எனவேஎமதுபரிசீலனைக்கு உட்படுத்தப்படாது சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்படும் எந்தவித இறைச்சியையும் மனித பாவனைக்குஉகந்தவை என்பதனை எம்மால் உறுதிப்படுத்த முடியாததினாலும் மற்றும் இச்சட்ட விரோத இறைச்சி விற்பனை உணவுச் சட்டம், இறைச்சிக் கடைக்காரர் சட்டம் என்பவற்றிற்கு முரணாக இருப்பதனாலும், அவ்வாறான இறைச்சியை வாங்குவதையோ அன்றி சமைத்து உண்பதையோ தவிர்த்து உடலாரோக்கியத்தைப் பேணுமாறு அனைத்து மக்களையும் கேட்டுக்கொளகின்றேன் என்றுள்ளது. (உ)

பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை பெருகலிற் குன்றல் இனிது.
குறள்

வலம்புரி

## இந்தியாவின் நரித்தனம்

இலங்கையில் யுத்தம் வியாபிப்பதற்கு இந்தியாவும் காரணம் என்பது மறுக்க முடியாதஉண்மை. ஈழத்தமிழர் தரப்பில் ஒன்றுக்குமேற்பட்ட ஆயுதக் குழுக்களின் உருவாக்கத்திற்கு இந்தியாகாரணமாக இருந்துள்ளது.

ஒன்றுக்கு மேற்பட்ட ஆயுதக் குழுக்களைத் தோற்றுவிப்பதன் மூலம் ஈழத்தமிழர்களின் ஒற்றுமையைக் குலைப்பதையும், தனிநாட்டுக் கோரிக்கையை மழுங்கடிப்பதையும் நோக்காகக்கொண்டு இந்தியா செயற்பட்டிருக்கிறதென்பதை அதன்தற்போதைய கொள்கைகளிலிருந்து உணரமுடிகிறது.

அமைதிப்படை என்ற பெயரில் அமளிப் படையை இலங்கைக்கு அனுப்பி நொந்து போன தமிழர்களின் குருதியைக்குடித்த கறைபடிந்த வரலாறு ஒரு போதும் மறக்க முடியாதவை,

அண்டை நாடான இந்தியா ஈழத் தமிழர்களுக்கு உதவும் என நம்பியிருந்த போதிலும் அநம்பிக்கை தமிழகஈறாக வீண் போனமை, எந்த இனத்திலும் நடக்காத - நடக்க முடியாத சம்பவமாகும்.

உதவியை எதிர்பார்த்த மக்களுக்கு உதவி தான் கிடைக்கா விட்டாலும் உபத்திரவமாவது இல்லா திருந்தால் அதுவே போதும் என்றநிலையில்,

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப்பேசினாராகள் என்ற குற்றச்சாட்டின் பேரில் தமிழகத்தில் வை. கோபாலசாமி, பழ. நெடுமாறன், சுப. வீரபாண்டியன் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். தானும் உதவி செய்யார் உதவி செய்ப வரையும் விடார்என்பதாக தமிழக முதல்வர் ஜெயலலிதாவின்ஆட்சியிருக்க,

மத்திய அரசு விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை இலங்கை இந்தியாவிடம் ஒப்படைக்கவேண்டுமெனவும், இதில் எந்த மாற்றமுமில்லை என இந்திய வெளியுறவு அமைச்சர் அறிவித்துள்ளார். இலங்கையில் சமாதானம் ஏற்படுவதற்கு அரசு விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டுமெனக் கூறும் இந்தியா மறு புறத்தில் பிரபாகரனைஒப்படைக்கவேண்டுமெனக் கூறுவது அதன் நரிக்குணத்தையே காட்டுகின்றது,

# ஆட்சிச் சீர்திருத்தம், தொழிலாளர் சேமநலன் ஆகியவற்றின் சிற்பி சேர் பொன். அருணாசலம்

ஈழத்து வரலாற்றைத் திருப்பி சுதந்திரப் பாதையில் இட்டுச் சென்றவர்களுள் தனித் தன்மை வாய்ந்தவர் சேர் பொன். அருணாசலம். ஈழத் திருநாட்டின் அரசியல், சட்ட, சமூக, கல்வி, கலாசார பொருளாதார, நிர்வாக, தொழில் வளர்ச்சித் துறைகள் அனைத்திலும் திருப்பு முனையைக் காட்டி உழைத்தவர் அவரே! அவர் காட்டிய வழிகள் பல இன்னும் ஈடேறவில்லை. ஆயினும் மீள அவர் கருத்துக்களையே பலர் ஒலிக்கிறார்கள். அவை அருணாசலத்தின் கருத்துக்கள் என்பதை அறியாது. பல்கலைக் கழகம் கண்டார்- சுதந்திரம் கண்டார்- தொழிலாளர் நல் வாழ்வு கண்டார். தொழிலாளர் நல்வாழ்வு- பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரமுள்ள உள்ளூராட்சி அமைப்பும், மக்கள வளர்ச்சிக்கு அவசியமென உணர்ந்தார். மாவட்ட சபைகள் மூலம், அதிகாரங்களைப் பகிர்ந்து ஒவ்வொரு குடிமகனும் பங்கு கொள்ளும் பரந்து பட்ட உள்ளூராட்சி முறை அவசியமென்றார் - இவை தொன்று தொட்டு இலங்கையில் இருந்ததாக மகாவம்சம் கூறுவதாக அவர் சுட்டிக் காட்டினார். இத் தேவை இன்று உணரப்பட்டும் மாவட்டசபைகள் வராதது பெரும் வேதனைக்குரியது. அந்நிய ஆட்சி முறையை இன்னும் கட்டியழும் "கறுப்புத் துரைமார்" முட்டுக்கட்டை போடுகின்றனர். இந்தச் சோதாக் கும்பல் விரைவில் ஒழிய வேண்டும். மாவட்ட சபைகளின் தந்தை சேர் பொன்.அருணாசலம் அவர்களே!

தொழில் ஆணைக்குழு

தொழிலாளர்களும் மனிதர்கள்- அவர்களுக்கும் இன்ப துன்பமுண்டு- மனித ஆசைகள், தேவைகள் உண்டு- அவர்கள் மனிதர்களாக மதிக்கப்பட வேணடும். மாடுகளாக, மந்தைகளாக வதைக்கப்படக் கூடாது என்று வாதாடியவர் அவரே. அவர் போராட்டத்தால் ஒரு தொழில்ஆணைக்குழு நியமிக்கப்பட்டு பல சீர் திருத்தங்கள் நிலை நாட்டப்பட்டன. முக்கியமாக பெண் தொழிலாளர், குழந்தைகள் சிறைத் தண்டனையிலிருந்து விலக்கு அளிக்கப்பட வேண்டும் என்று வாதாடி வெற்றி கண்டவர் அவரே! முதன் முதலில் ஓர் அடிப்படைச் சம்பளக் குரலை எழுப்பி பெற்றுத் தந்தவரும் அவரே. தொழிலாளருக்கே தன் வாழ்வை அர்ப்பணித்தார் .நலம் படைத்தார்.

### தொழிற்சங்கங்கள்

அவர் 9-2-1920 இல் இலங்கைத் தொழிலாளர் கூட்டணியின்அமைப்புக்கூட்டத்தில் ஆற்றிய உரையில்; "முதல் குற்றத்தின் போது, பெண்களையும், குழந்தைகளையும் சிறைத்தண்டனையிலிருந்து விடுவிக்க எடுத்த நடவடிக்கையில் வெற்றி கொண்டோம். தொழில் சட்டத்திலுள்ள தண்டனைப்பகுதிகள் அனைத்தும் நீக்கப்படும்வரை நாம் திருப்தியடையோம். நல்லசம்பளம், நன்றாய் வாழும் தொழிலாற்றும், சூழ்நிலைபெற உழைத்தோம். முதலாளிகளுக்கும்அரசாங்கத்திற்கும், தொழிலாளர் தொல்லைப்படுவதை முறையிட்டுள்ளோம். இவைபற்றி உரிய அதிகாரிகளுக்கு நன்குதெரியும் சில சுகம் பெற்றோம் இன்னும்அதிகம் பெறவுண்டு. தொழில் மசோதா சட்டமாக முன், மற்றவர் உதவியில் நீங்கள் நம்பியிருக்கக்கூடாது. உங்களிலேயே பெரும்பாலும் நம்பிக்கை வைக்கவேண்டும். அதற்கு நீங்கள் தொழிற்சங்கங்களை அமைக்கவேண்டும் ஒன்றுதிரண்டால்தான் பலம் பெறலாம்-வெல்லலாம். பத்து நூறுபேரை ஒவ்வொருத்தராகச்சுலபமாகத்தட்டிஎறிந்து விடலாம், அவர்கள் ஒன்றுகூடி தொழிற்பட்டால், அவர்கள் பலம் பெற்றுவிடுவர். தூண்டி விடமுடியாது. எமது மக்களிற்பெரும்பாலோர் ஒன்று கூடித் தொழிற்படும் பழக்கத்தை விடுத்துக் குழந்தைகள் போலாகிவிட்டார்கள். அவர்களிடம் பலமில்லை தன்னம்பிக்கையில்லை- அடிக்கடி அடுத்தவர் உதவியை நாடுகிறார்கள். பழைய தன்னம்பிக்கையை மீண்டும் பெற்று, சொந்தநன்மைக்கும், நாட்டு நன்மைக்கும் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டுகின்றேன். இதைச் செய்யும் வரை எந்த இன்னல்களால் அழுந்துகிறீர்களோ, அவற்றிலிருந்து மீட்சி கிடையாது. நல்ல சம்பளம். குறுகிய நேரவேலை - ஆறுதலளிக்கும் களிப்புக்கும் தாராள வசதி- மலிவான நல்லசாப்பாடு- வாழநல்லமனைகள்- முறையிட்டு விசாரணைமூலம் நிவர்த்தி கோரும்வசதி- குழந்தைகளின் கல்வி முதலானவை இவை உங்களுக்குத் தேவையானவை" என்று குறிப்பிட்டார்.

இன்றைய தொழிற்சங்கவாதிகளும் இதையே தான் இன்றும் பாராயணம் செய்கிறார்களே! இது ஒன்றே அவர் தொழிலாளர் நன்மைக்குச் செய்த சேவையைக் காட்டுகிறது. தொழிலாளர் காவலராக, தோழராகத்தொழிலியக்க தந்தையாக அவர் உழைத்தார் பயன்கண்டார். அவர் செய்த பணிகளை யாரும் மறந்து விட முடியாது இலங்கையின் தொழிற்சங்க வரலாற்றை வெளியிட்டுள்ள லங்கா தொழிற்சங்கங்களின் சம்மேளனம்(மாஸ்கோ கொம்யூனிஸ்ட்கட்சி சார்பானது) வெளியிட்டுள்ள நூலில் சேர் பொன். அருணாசலம் அவர்களுக்கு முதலிடம் கொடுத்துள்ளது.

தொழிலாளர் சேமநலலீக்

அப்போது தொழிலாளர்களின் நல உரிமைகளை முன் வைத்து அவற்றிற்காகப் போராடக்கூடிய தொழிலாளர் ஸ்தாபனங்கள் இருக்கவில்லை இலங்கையில் தொழிலாளர்களின் நலன்களுக்காக முதலில் இயக்கம்நடத்தியவை மேல், மத்திய வர்க்கங்களின் ஸ்தாபனங்களே. 'இலங்கை தொழிலாளி வர்க்கங்களின் நலன்களுக்காகப் பாடுபட, ஊழியர்கள், சமூக ஊழியர்கள், பெரும் பதவியாளர்களைக் கொண்ட இலங்கைத் தொழிலாளர் சேமநல லீக் 1919 ல் நிறுவப்பட்டது. சேர். பொன் அருணாசலத்தைத் தலைவராகக் கொண்ட இந்த லீக் பின் வரும் தீர்மானத்தை 1919 ல் இலங்கைத் தேசியக்காங்கிரசில் நிறைவேற்றச் செய்தது. உழைப்பு ஒருவகைச் சமூக சேவை என்பதையும்மற்றெல்லாச் செல்வங்களிலும்பார்க்க உழைப்பாளரின் சேம நலனே மிக முக்கியத்துவம்வாய்ந்தது என்பதையும் பூரணமாக அங்கீகரியாத ஷரத்துக்கள் அனைத்தையும் ஒழித்துக் கட்டும் வரையில் தீவின் தொழிற் சட்டங்கள்திருத்தப் படவேண்டும். தொழில் பற்றிய சிவில் உடன்படிக்கைகள் மீறப்பட்டால் தொழிலாளர்கள் மீது விதிக்கப்பட்ட கிரிமினல் தண்டனைகளும், சிறைத் தண்டனைகளும் ஒழிக்கப்படவேண்டும். குழந்தைகளுக்கு கட்டாயக் கல்வி, சம்பளச்சட்டங்கள் மூலம் குறைந்த பட்ச சம்பள அளவுகளை நிர்ணயித்தல் ஒய்வுக்கும்பொழுதுபோக்குக்குமான கூட்டங்கள், கர்ப்பஸ்திரிகளுக்கும் சிசுக்களுக்குமான பராமரிப்பு, நல்லஉழைப்பு, வாழ்க்கை நிலைகள், சகல தொழிலாளர்களினதும் ஸ்தாபனம் சேரும் உரிமையை அங்கீகரித்தல் ஆகிய கோரிக்கைகளை இத் தீர்மானம் முன் வைத்தது (1951 ல் நடந்த சர்வதேசிய தொழில் ஸ்தாபனத்தின் ஆசியப்பிராந்திய மகாநாட்டின்அறிக்கை பக்கம் 81 பெரி சுந்தரத்தின் உரை)

இந்தக் காலகட்டத்தில் தான் இலங்கைத் தொழிலாளர் சம்மேளனமும்அமைக்கப்பட்டது. சேர் பொன். அருணாசலத்தையும், மார்டின்ஸி பெரேராவையும் மற்றையோரையும் தலைவர்களாகக் கொண்டிருந்த ஸ்தாபனமும், தொழிலாளர்களின் சேமநலன் பாதுகாக்கப் பாடுபட்ட மத்திய தர வர்க்க நிறுவனமாகும். இதன் பெயர் சுட்டிக்காட்டுவது போல இதுஒரு தொழிற்சங்கங்களின்சம்மேளனமல்ல.

நன்றி
எழுச்சி - 1967

## மறைந்தார் மாண்பு

## சாயி அருளமுதம்



ஆத்மாவை உணரவும் இறைவனை மனக் கண்ணினால்தரிசிக்கவும் தீவிரமாக முயலுங்கள். இவ்வாறான முயற்சியில் ஏற்படக்கூடிய தோல்விகூட உலகாயத முயற்சிகளில் பெறப்படும் வெற்றிகளிலும் பார்க்க மாட்சிமைமிக்கதாகும். எருமைக்குக் கொம்புகளுண்டு. யானைக்குத் தந்தங்களுண்டு. ஆயினும் எவ்வளவு வித்தியாசம்? உடம்பினுள் வாழ்ந்து, உடம் போடு வாழ்ந்து, உடம்புக்காகவே வாழுதல் ஒரு புழுவின் வாழ்க்கையாகும். இறைவனோடு கூடி உடம்பினுள் வாழுதலே சிறப்பானது. ஏனெனில் இறைவனே மனிதனின் ஜீவியம் ஊக்கமற்றதும், முயற்சியை பொறுப்பதுமான தாஸம குணம் பொருந்திய மனிதர், அகங்கார மேலீட்டினால் தமது பிள்ளைகள், உறவினர் மீது மட்டுமே அன்புகொண்டிருப்பர் சுறுசுறுப்பும் உணர்ச்சிவசப்படும் தன்மையும் கொண்ட ராஜஸகுணம்பொருந்திய மனிதர் அதிகாரத்தையும், சுயகௌரவத்தையும் தேடுவதில் நாட்டங்கொண்டு, அவற்றைப் பெற, உதவுவோர் மீது அன்பு செலுத்துவர். ஆனால் தூய்மையும், நற்பண்புகளும், நிறையும் உடைய சாத்வீக குணம் படைத்தோர் இறைவன் எல்லாவற்றிலும் நிறைந்துள்ளாரென்பதனால் - எல்லாவற்றிலும் அன்பு செலுத்தி தாழ்மையுடன் தொண்டு செய்வதில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வர்.

நன்றி,
நாளாந்த நற்சிந்தனை

## இடம்பெயர்ந்துள்ள மக்கள் நலன்பேண தனிப்பிரிவு

(யாழ்ப்பாணம்)
யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுஅலுவலகத்தில், கடந்தகால யுத்தங்கள் காரணமாக இடம்பெயர்ந்து வாழும்மக்களின்நலன்களைப் பேணுவதற்கென தனியான பிரிவு கடந்த இருமாதங்களாக இயங்கி வருகிறது.

இடம்பெயர்ந்துள்ள மக்கள் தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்தல் மற்றும் தமது இருப்புக்களுக்குஏதாவது அச்சுறுத்தல் நேரின் இப்பிரிவுடன் தொடர்பு கொள்ளலாம் என யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகசெயற்றிட்ட அதிகாரி ஏ. எஸ். எம். றயீஸ் தெரிவித்துள்ளார். (உ-6)

## மண்ணைப் பெறுவதற்கு விண்ணப்பிக்க வேண்டும்

(மந்திகை)
சூழல் பாதுகாப்புக் குழுவினால் வழங்கப்படும படிவத்தினைப் பூர்த்திசெய்து ஒப்படைப்பவர்களுக்கு மாத்திரமே இனிமேல்மண் விநியோகிக்கப்படும் என சூழல் பாதுகாப்புக்குழு அறிவிததுள்ளது.

நேற்றுமுன் தினம் முதல் இந்நடைமுறை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

மண்பெறுவதில்உழவு இயந்திர உரிமையாளர்கள் சிலர் ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்கத் தவறியதாலேயே இந்நடைமுறை கொண்டு வரப்பட்டுள்ளது. (உ-23)

## அமிரின் அஞ்சலி நிகழ்வு

(தென்மராட்சி)

அமரர் அ. மிர்தலிங்கத்தின் 75 வது பிறந்த தினமாகிய எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி செயலகத்தில் அஞ்சலி நிகழ்வு ஒன்று இடம்பெறவுள்ளது.

இவ் அஞ்சலி நிகழ்வில் யாழ் மாநகரசபை முதல்வர் செல்லன் கந்தையன் உட்பட கூட்டணிப் பிரமுகர்கள் அஞ்சலியுரைகள் நிகழ்த்தவுள்ளனர். (உ-77)

## மாடுகளுக்குத் தடுப்பூசி

(மந்திகை)

பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள மாடுகளுக்கு தொண்டை அடைப்பான் நோய் எதிர்ப்பு மருந்து ஏற்றும் பணி கடந்த திங்கள் முதல் இடம்பெற்று வருவதாக கால்நடை வைத்திய அதிகாரி எஸ் வசீசரன் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 4 ஆம் திகதிவரை இப்பணி இடம்பெறவுள்ளதாகவும்,

மருந்து ஏற்றுவது தொடர்பாக முன் கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-23)

## உயிர்ப்பூட்டல் குழு

(யாழ்பபாணம்)

கியூடெக் நிறுவனத்தினால் ஈச்சமோட்டை சன சமூக நிலையத்தில், இம் மாதம் 31 ஆம் திகதி சனிக்கிழமை உயிர்ப்பூட்டல் குழு ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது. (உ-6)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

எழுவைதீவு கடல்தொழிலாளர்கள் மற்றும் மகளிர் உயிர்ப்பூட்டல் குழுக்களின் எதிர்காலத் திட்டங்கள் பற்றிய கலந்துரையாடல் நாளையும் நாளை மறுதினமும் எழுவைதீவு ஆலய முன்றலில் இடம்பெறவு ளது. (உ-6)

## கூட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அமைக்கும் கூட்டம் நாளைவெள்ளிக்கிழமை மு.ப 10 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் கே. எஸ், செல்வநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கப் பிரதிநிதிகள் கடல்தொழில் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் இதில் கலந்துகொள்ளவுள்ளனர். (உ 75)

## அமெ.

கம் ஆகியோரிடனும் பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

அதேவேளை தென்மராட்சியில் மிதிவெடிகள் அகற்றும் பணியையும் அவர் பார்வையிடவுள்ளார்.

யாழ் விஜயத்தை முடித்துக் கொண்டு கொழும்பு திரும்பும் அவர் நாளை வெள்ளிக்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர்களுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இதேவேளை

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசு மேற்கொண்டுவரும்சமாதான நடவடிக்கைகளை அங்கீகரிப்பதாக அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் றிச்சட் ஆமிடேஜ்ஜின் இலங்கை விஜயம் அமைந்துள்ளதாக பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷுடன் பிரமர் ரணில் விக்கிரமசிங்க வாஷிங்டனில் அண்மையில் நடத்திய பேச்சுவார்த்தைகளைத்தொடர்ந்து ஆமிடேஜ்ஜின் இலங்கை விஜயம் இவ்வளவு விரைவாக அமைந்துள்ளமை மிக முக்கியம் வாய்ந்த விடயம் என்றும் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

# விடுதலைப் புலிகள் விடயத்தில் அரசு மிக அவதானமாக உள்ளது

## பாதுகாப்பு அமைச்சர் உரை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான விடயத்தில் அரசாங்கம் மிகவும் அவதானமாகவே நடந்து கொள்கிறதென்று பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்ற ஒத்திவைப்பு வேளையில் ஜே.வி.பி எம்.பி விமல்வீரவன்ச பாதுகாப்பு அமைச்சரிடம் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு முன்னர் அவர்களின் ஆயுதங்களைக் களையவேண்டும். அத்துடன் அவ்வமைப்பினர் மீது நாட்டின் பொதுவான சட்டதிட்டங்களைப் பிரயோகிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

அதற்குப் பதிலளித்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: தேசிய ரீதியிலான முக்கியத்துவம் வாய்ந்த பிச்சினைகளுக்குத் தீர்வு காணுகின்ற வேளையில் அரசாங்கம் அனைவருக்கும் நீதி கிடைக்கக் கூடிய முடிவுகளையே எடுக்கும்.

நன்றாக ஆராய்ந்த பின்னரே விடுதலைப் புலிகள் கடல்வழிப் போக்குவரத்தில் ஈடுபட அரசாங்கம் அனுமதி அளித்தது.

நாட்டின் நலனைப் பாதுகாப்பதில் அரசாங்கம் திடசங்கற்பம் பூண்டுள்ளதென்று தெரிவித்த அமைச்சர் ஜே. வி. பி. மககள் அபிலாசைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்பதில் காட்டும் ஆர்வத்தைப் பாராட்டினார்.

இதேவேளை நாட்டின் எதிர்காலம் பற்றிய பொறுப்பு ஐக்கிய தேசிய முன்னணிக்கு மாத்திரம் இல்லை. அப்பொறுப்பு ஜே. வி. பிக்கும் உள்ளதென்று அமைச்சர் மாரப்பன தெரிவித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது (இ)

# அமெரிக்கத் தாக்குதலின் சூத்திரதாரி சவூதியில் உள்ளாராம்

## புலனாய்வுத்துறை கண்டறிவு

(வாஷிங்டன்)

அமெரிக்கா மீதான செப்ரெம்பர் 11 தாக்குதலின் சூத்திரதாரி ஒருவர் அமெரிக்காவின் நட்பு நாடான சவூதி அரேபியாவை சேர்ந்தவர் என அமெரிக்க புலனாய்வு துறை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

சவூதி அரேபியாவின் முக்கியமானதொரு அமைப்பின் உறுப்பினர் எனக்கருதப்படும் அந்திரஜிப் என்பவரே இத்தாக்குதலின் சூத்திரதாரிகளில் ஒருவராக கருதப்படுகிறார்.

இவர் கடந்த காலங்களில் விமானக் கடத்தல், பாரிய இழப்புக்களை ஏற்படுத்தக் கூடிய ஆயுதங்களை சேகரித்தல் போன்ற குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்தார் என அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

அமெரிக்கத் தாக்குதலின் சூத்திரதாரியான இவரை வெகுவிரைவில், அமெரிக்க இராணுவத்தினர் கைது செய்ய வேண்டும் என கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது (உ-10-8)

## தீவகத்தில்

றுறைப் பிரதேச செயலகத்திற்கு முன்பாகவும் இடம்பெறவுளளது.

மறியல் போராட்ட முடிவில் யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுவுக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்படவுள்ளது. (உ-75)

## அமெரிக்காவில் இன்று சமாதி

(யாழ்ப்பாணம்)

சென்னையில் இறையடி சேர்ந்த யோகமகராஜ் சச்சிதானந்த சுவாமியின் உடல் இன்று அமெரிக்காவில் அவரது ஆச்சிரமத்தில் உள்ள விசேட சதுக்கத்தில் சமாதி வைக்கப்படும்

இதனைமுன்னிட்டு இன்று மாலைநல்லூர் திவ்யஜீவன சங்கமண்டபத்தில் விசேட பூசையும் வழிபாடும் இடம்பெறவுள்ளது (இ)

## ஜனாதிபதி..

சந்திரிகா உத்தரவாதம் வழங்கியிருந்ததார் ஆயினும் அந்தஉத்தரவாதத்தை அவர் இதுவரை நிறைவேற்றவில்லை

இந்தநிலையில் 18வதுஅரசியல் அமைப்புச் சட்டத்தை திருத்துவதற்கு பொதுஜனஐக்கிய முன்னணி எம்.பிக்கள் பலர் ஆதரவு தந்துள்ளனர் என்றும் மஹிந்தசமரசிங்க மேலும் கூறியுளளார் (த)

## நம்பிக்கை

பிரேரணைக்கு ஆதரவாக 92 வாக்குகள் கிடைத்தன.

இதேவேளைபிரேரணையை எதிர்த்து ஐக்கிய தேசியமுன்னணியுடன் தமிழ்க்கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி. புளொட் ஆகியவற்றின் பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

பிரேரணைக்கு எதிராக 127 வாக்குகள் அளிக்கப்பட்டன.

இதனடிப்படையில் 35 அதிகப்படியான வாக்குகளால்நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டது.

இதேவேளை பிரேரணை மீதானவாக்கெடுப்பு இடம்பெற்றுக்கொண்டிருந்த வேளையும் முடிவுகளை சபாநாயகர் அறிவித்த பொழுதும் பாராளுமன்றத்தில் அமர்ந்திருந்த பார்வையாளர்கள் பெரும் கூச்சலிட்டு விசிலடித்து ஆரவாரமசெய்தனர்.

இதனை எதிர்க்கட்சித் தரப்புப் பாராளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்கா கண்டித்து உரையாற்றினார்.

பாராளுமன்ற சபாநாயகர் யோசப் மைக்கல்பெரேராவும இச்செயற்பாட்டைக் கண்டித்து பாராளுமன்றில் அமர்திருந்தவர்களை எச்சரித்தார்

இதேவேளை பிரதமந்திரி ரணில் விக்கிரமசிங்க மற்றும அமைச்சர்கள் மீது நம்பிக்கை தெரிவிக்கும தீர்மானமஒன்று அமைச்சர் லொச்கு பண்டாரவினால் சமர்ப்பிக்கப்பட்டுளளது.

இது தொடர்பான விவாதம எதிர்வரும 29ந் திகதி இடம் பெறவுள்ளது. (இ)

## அமைச்சர்

இதேவேளை அரசாங்கம் முஸ்லிம்கள் விடயத்தில் நேர்மையீனமாகச் செயற்பட்டால் முஸ்லிம் காங்கிரஸ் அரசுக்கு வழங்கிவரும் ஆதரவை விலக்கிக் கொள்ளுமென்று அமைச்சர் ஹக்கீம ஏற்கனவே தெரிவித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

## எக்ஸ்போ விமான சேவைகள்ரத்து

(யாழ்ப்பாணம்)

எக்ஸ்போவிமானசேவைநிறுவனத்தின் யாழ்ப்பாணம் இரத்மலானைக்கு இடையிலான வெள்ளி, சனிதினங்களின் மாலைநேரப் பயணமும் ஞாயிறு திங்கள் தினங்களின் காலைப்பயணமும் தவிர்க்க முடியாத காரணத்தினால் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும்

அத்தினங்களில் பயணம் மேற்கொள்ள பதிவுசெய்தவர்களை உடன் ,யாழ்அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## வரதன்...

லைப் புலி உறுப்பினரான சின்னத்தம்பி பத்மராஜா (தமிழடியான்) என்பவரையும் ஆதரவாளரான கமலநாதன் என்பவரையும் வரதன் குழுவைச் சேர்ந்த மூவரும் மண்வெட்டியினால் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

மேற்படி சம்பவத்தில் காயமடைந்த இருவரும் மட்டக்களப்பு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் .

இதனால் விடுதலைப் புலிகளின் ஆரையம்பதி அரசியல் துறை அலுவலகம் மூடப்பட்டுள்ளதுடன் மேற்படி சம்பவம தொடர்பாக மட்டக்களப்பு கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த)


## திருத்தம்

20-08-2002ம் திகதியில் எம்மால் விளம்பரம் செய்யப்பட்ட கேள்வி விண்ணப்பத்தில் மீளளிக்கப்படாத கேள்விப்படிவப்பணம் - ரூபா 250-00
மீளளிக்கப்படும் கேளவி வைப்புப்பணம் ரூபா 5000-00
எனத் திருத்தி வாசிக்கவும்.

தலைவர்
வலிகாமம் பனை தென்னை,
வள அபிவிருத்திக் கூட்டுறவுச்
சங்கங்களின் கொத்தணி,
மானிப்பாய்.

(சி 4874)

## ITP தகவல் தொழில் நுட்பப் பூங்கா

272, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி 021-3641 E-mail: itp @ sltnet lk

அறிவித்தல்

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் ஆரம்பிக்கப்பட இருக்கும் புதிய கற்கைநெறியான **Diploma In Information Technology** முன்னர் குறிப்பிட்டபடி 26-08-2002 அன்று ஆரம்பமாக இருக்கின்றது என்பதனை அறியத் தருகின்றோம். இக் கற்கைநெறி சம்பந்தமான மேலும் விளக்கங்களுக்கு 24-08-2002 அன்று காலை 10 மணிக்கு நடைபெறும் கலந்துரையாடலில் பங்குகொள்ளுமாறு கேட்கப்படுகிறீர்கள்

பின்வரும் விடயங்கள் கருத்திற் கொள்ளப்படும்,

- இலகு தவணைமுறை
- வார இறுதியில் விரிவுரை ஆரம்பித்தல்
- கற்கைநெறியில் சேர்க்கப்பட்டுள்ள பகுதிகளுக்கான விளக்கங்கள்

(சி 4875)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தினரால் இல, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 22-08-2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.